வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 10.05.2021 திங்கட்கிழமை | இதழ் : 159 | பக்கங்கள் : 16




# இலங்கையை ஆட்டிப் படைக்கும் ‘கொரோனா’ நேற்று மட்டும் 2 ஆயிரத்து 672 தொற்றாளர்கள்

## ஒரே நாளில் அதிகளவிலான நோயாளர்கள் அடையாளம்

கொழும்பு, மே 10

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று அதிதீவிரமாகப் பரவி வருகின்றது. குழந்தைகள் தொடக்கம் வயோதிபர்கள் வரை இதற்கு இலக்காகி வருகின்றனர். அந்தவகையில், நாள் தோறும் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றுக் குள்ளானோரின் எண்ணிக்கையானது முதல் தடவையாக 2 ஆயிரத்தைக் கடந் துள்ளது. நேற்று 2 ஆயிரத்து 672 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

15

## வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க யாழில் நேற்று மரவுரிமை மையம் உதயம்



யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களான மந்திரி மனை, சங்கிலியன் அரண்மனை, யமுனா ஏரி போன்றவற்றைப் பாதுகாத்து அதை மீள்நிர்மாணம் செய்யும்

15

# மிக ஆபத்தான நிலையில் நாடு

## அரசு சரியான முடிவை எடுப்பது அவசியம் மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மே 10

“புதிய கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு மோசமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில், அரசு சரியான முடிவுகளை எடுப்பது மிகவும் அவசியமாகும்.”

- இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதில் உள்ள முக்

15

## யாழில் கொரோனாவால் மேலும் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் வயோதிபர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 22ஆக அதிகரித்துள்ளது.

வடமராட்சி, உடுப்

15

## மேலும் 15 பேர் மரணம் கொரோனாச் சாவு 801

கொழும்பு, மே 10

இலங்கையில் நேற்று 15 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 10 பேர் பெண்கள் எனவும், மற்றைய 5 பேரும் ஆண்கள் என்றும் அரச தகவல் திணைக்

15

## மேலுமொரு கர்ப்பிணிப்பெண் கொரோனாத் தொற்றால் சாவு!

கொழும்பு, மே 10

இலங்கையில் மேலும் ஒரு கர்ப்பிணிப் பெண் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

காலி, கராப்பிட்டிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்

15

## யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் உட்பட வடக்கில் மேலும் 21 பேருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 21 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் மாதிரி வழங்கிய யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபருக்கும் கொரோனாத் தொற

15

## அரசியல் கைதிகள் விவகாரத்திலும் தமிழ்க் கட்சிகள் இணைய வேண்டும்

### உறவுகள் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

கல்முனை விவகாரத்தைப் போல் அரசியல் கைதிகள் விடயத்திலும் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பொதுப்பொறிமுறையை முன்வைத்துச் செயற்பட வேண்டும் என தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் அவசர கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

15

## குடாநாட்டில் மேலும் மூன்று இடங்களில் சிகிச்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 10

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் நாவற்குழியில் அமைந்துள்ள அரச களஞ்சிய கட்டடம் என்பவற்றை கொரோனா சிகிச்சை நிலையங்களாக அமைப்பதற்கு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்துடன், இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வயாவிளானில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றிலும் கொரோனா சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகின்றது.

நாட்டில் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் உயர்

15

## பாடசாலையை மீண்டும் எப்போது ஆரம்பிப்பது?

### புதனன்று நிபுணர்களுடன் கல்வி அமைச்சர் ஆலோசனை

கொழும்பு, மே 10

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் நிபுணர்களுடன் எதிர்வரும் புதன்கிழமை கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் நாட்டின் பிரதான வைத்திய நிபுணர்கள், கல்வியியல் நிபுணர்கள்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# ஊழியர்களுக்கு உடனே தடுப்பூசி போடுங்கள் இல்லையேல் சேவையை இடைநிறுத்துவோம்

*அரசுக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை*



கொழும்பு, மே10

**"இந்த வார இறுதிக்குள் அனைத்து தனியார் பஸ் ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், அடுத்த வாரத்துக்குள் தனியார் பஸ் சேவையை இடை நிறுத்த முடிவு செய்துள்ளோம்."**

- இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்.

இது தொடர்பில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன மேலும் தெரிவிக்கையில்,

"தனியார் பஸ் ஊழியர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகம் என்பதால் அவர்களுக்குத் தடுப்பூசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசிடமும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமும் கோரியுள்ளோம்.

ஆனால், எங்கள் கோரிக்கையை அரசு பொருட்படுத்தவில்லை. சுகாதாரத்துறை உள்ளிட்ட முன்கள பணியாளர்களுக்குத் தடுப்பூசி போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது போன்று பஸ் ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும்.

45 ஆயிரம் ஊழியர்கள் தனியார் பஸ் சேவையை முன்னெடுத்து வருகின்ற நிலையில், அவர்களிடமிருந்து தினசரி வசூலை சேகரிப்பதால் உரிமையாளர்களுக்கும் தொற்று ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே, அவர்களுக்கும் தடுப்பூசி போடவேண்டும்.

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் ரயில்வே ஊழியர்கள் உள்ளிட்ட போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கும் தடுப்பூசி போடப்படவில்லை.

போக்குவரத்து ஊழியர்களிடையே கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டால் நாட்டின் பொதுப்போக்குவரத்தை முன்னெடுப்பதில் பாதிப்பு ஏற்படும்" - என்றார். (இ)

# போலி டொலர் நாணயத்தாள்கள்: பொலிஸார் எச்சரிக்கை விடுப்பு

கொழும்பு, மே 10

இலங்கையில் போலி டொலர் நாணயத்தாள்களை அச்சிட்டு விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதனால் டொலர் நாணயத்தாள் பயன்பாட்டின்போது எச்சரிக்கையுடன் செயல்படுமாறும் மக்களுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: -

"கந்தளாய், அநுராதபுரம் மற்றும் வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் கடந்த காலங்களில் போலி நாணயத்தாள்கள் அச்சிட்டமை தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். சந்தேகநபர்கள் இலங்கை ரூபா நாணயத்தாள்களை இவ்வாறு அச்சிட்டு, அதனைப் பொது மக்கள் மத்தியில் புழக்கத்துக்குக் கொண்டு செல்லவும் முயற்சித்திருந்தனர்.

இந்நிலையில், ரூபா நாணயத்தாள்களைப் போன்று, டொலர்களும் அச்சிடப்படுகின்றன என்று தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. 100 டொலர்கள் பெறுமதியான நாணயத்தாளே போலியாக அச்சிடப்பட்டு வருகின்றது எனத் தெரியவந்துள்ளது. அதனால் இது தொடர்பில் அனைவரும் கவனமாகச் செயற்பட வேண்டும்.

டொலர்களை பரிமாற்றம் செய்யும் நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட டொலர்களைப் பயன்படுத்தும் ஏனைய நிறுவனங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

இது தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைக்கப் பெற்றால் 011-2326670, 011-2320145 ஆகிய இலங்கங்களைத் தொடர்பு கொண்டு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்க முடியும்.

இந்நிலையில் 1000 ரூபா மற்றும் 5000 ரூபா நாணயத்தாள்கள், டொலர்கள் கிடைக்கப் பெற்றால் அவை தொடர்பில் நன்கு கவனிக்க வேண்டும். அது தொடர்பில் ஏதேனும் சந்தேகம் எழுந்தால் அது தொடர்பில் பொலிஸாருக்கு உடனே அறிவிக்க வேண்டும்" - என்றார். (இ)

# புளொட்டின் உப தலைவர் மகாதேவன் காலமானார்



அம்பாறை, மே 10

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் (புளொட்) ஆரம்பகால உறுப்பினரும் கட்சியின் உப தலைவர்களுள் ஒருவரும் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான காரைதீவைச் சேர்ந்த பக்தன் என்கின்ற மகாதேவன் சிவநேசன் கடும் சுகயீனம் காரணமாக நேற்றுக் காலமானார்.

1980களில் அம்பாறை மாவட்டத்தில் காந்தீயம் அமைப்பின் முக்கிய செயல் பாட்டாளராக இருந்த இவர், பின்னர் புளொட் அமைப்பில் உள்வாங்கப்பட்டு புளொட்டின் அம்பாறை - மட்டக்களப்பு பிராந்தியப் பொறுப்பாளராகவும் இருந்தவர்.

அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்துக்கு மாத்திரமல்ல தமது அமைப்புக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் ஒரு பேரிழப்பு என்று புளொட் அமைப்பு தனது அஞ்சலி அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ)

கல்வி TV CHANNEL-1

காலை

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

பகல்

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## இப்படியும் நடக்கிறது...!

மாகாணசபைகளுக்கான தேர்தல் இப்போதைக்கு இல்லை என்பது தெரிந்த சங்கதிதான்.

தேர்தல் நடந்தாலும் ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது பாராளுமன்ற தேர்தலிலோ பெற்றவெற்றியை பெறமுடியாது என்பது அரசதரப்பிற்கு தெரியாததல்ல.

அதனால்தான் தாம் வெற்றிபெறக்கூடியவாறு தேர்தல் முறையை மாற்ற முயற்சி நடப்பதாக கூறப்படுகின்றது.

பொதுஜனமுன்னணி தற்போது முன்வைத்திருக்கும் இந்த மாற்றங்கள் வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தை முற்றிலும் இல்லாமல் செய்துவிடும் என்று அச்சம் ஏற்பட்டிருக்கின்றது.

இதுதொடர்பாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் மூத்த அரசியல்வாதியுமான மனோ கணேசன் தனது முகநூலில் நீண்ட விளக்கம் என்றை எழுதியிருக்கிறார்.

இந்தப் பத்தியை எழுதுவதற்கு ஆரம்பிக்கும்போது அவரது முகநூல் குறிப்பு படிக்கக் கிடைத்தது.

அதனை அப்படியே இந்தப் பத்தியில் தருவது அவசியமானதாக தெரிந்தது.

அதனால் அதனை அப்படியே கீழே தருகின்றேன்.

இது மனோ கணேசனின் வாக்கியங்கள்:

வடக்கு கிழக்குக்கு வெளியே 50 விகித தமிழரும், 65 விகித முஸ்லிம்களும், தென்னிலங்கை மாவட்டங்களில் சிதறி வாழ்கிறார்கள்.

இன்றைய விகிதாசார தேர்தல் முறைமை மாற்றப்பட்டால், இந்த மக்களின் பிரதிநிதித்துவங்கள் சரிபாதிக்கு மேல் மாகாணசபைகளிலும், பாராளுமன்றத்திலும் குறைந்து விடும்.

அதேபோல், அம்பாறையில் தமிழரும், மட்டக்களப்பில் முஸ்லிம்களும் வெற்றிபெறுவதுகூட கடினமாகிவிடும். திருகோணமலையிலும், வன்னியிலும் கூட இன்றுள்ள ஒழுங்கு மாறும். இது நடந்தால், இவை நடக்கும் என்பதை எழுதி வைத்துக்கொள்ளுங்கள்.

பெரும்பான்மை கட்சிகள் ஒருபோதும் நேர்மையாக நடக்காது. ஆகவே, பெரும்பான்மை கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து போட்டியிட்டு, அவர்களுக்கு சிதறி கிடக்கும் தமிழ், முஸ்லிம் வாக்குகளை வாங்கி கொடுத்து விட்டு, பிறகு பட்டியலில் நியமனம் கிடைக்கும் என எதிர்பார்ப்பது இலவுகாத்த கிளியின் கதையாகி விடும்.

ஒருபோதும், பெரும்பான்மை கட்சிகளும், பெரும்பான்மை அதிகார வர்க்கமும், தனித்தமிழ் தொகுதிகளை நுவரேலியா மாவட்டத்துக்கு வெளியே உருவாக்க உடன்படாது.

அடுத்தது, பல அங்கத்தவர் தொகுதிகளையும், நிலத்தொடர்பற்ற தனித்தமிழ் தொகுதிகளையும் புதிதாக உருவாக்க ஒருபோதும் இடமில்லை. இது வெறுங்கனவு.

இன்றைய முறையில், இன்று கடைசியாக மாகாணசபைகளில், பாராளுமன்றத்தில், இருக்கின்ற தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை குறைந்தபட்ச அளவு கோலாக கொண்டு அவற்றை உறுதிப்படுத்த, மாற்று யோசனையை தரும்படி பெரும்பான்மை கட்சிகளை நாம் கூட்டாக எழுத்து மூலம் கோர வேண்டும். பட்டியல் நியமனங்களை ஒருபோதும் கணக்கில் எடுக்க முடியாது என்பதையும் அறிவிக்க வேண்டும்.

மாறாக, நாமே தொகுதி முறைமையை ஏற்றுக்கொண்டு, 60:40 என்றும், 70:30 என்றும் மாற்று யோசனைகளை முன் வைப்பது முறையாகாது.

ஒருசிலரின் இந்த அரசியல் அதிக பிரசங்கித்தனம், நமது இனத்தை நிரந்தர அபாயத்தில் போட்டு விடும்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நியாயமான முறைமை முன்வைக்க முடியாவிட்டால், இன்றைய அதே விகிதாசார முறைமையை அடிப்படையாக கொண்டு, இன்றைய தேர்தல் மாவட்டங்களை ஜனத்தொகைக்கு ஏற்ப, இரண்டு, மூன்றாக பிரிக்கும், "வலய தேர்தல் முறைமை" யை நாம் மாற்று யோசனையாக முன் வைக்க வேண்டும்.

இது புதிதல்ல. ஏற்கனவே, நமது அரசியலமைப்பில் 14ம் திருத்தமாக கொண்டுவந்து விட்டு நடைமுறைப்படுத்தாமல் விடப்பட்டதாகும்.

இது எமது அரசியல் இருப்பு தொடர்பான பிரச்சினை. தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயமான பிரதிநிதித்துவங்களை ஒழிக்க ஒருதலைபட்சமாக பெரும்பான்மை அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் அது உச்சகட்ட பேரினவாதம்.

பேரினவாதத்துக்கு அடிபணிந்து, எமது இனத்தின் பிரதிநிதித்துவங்களை விட்டுக்கொடுத்துவிட்டோம், என்ற எதிர்காலத்தின் பழிச்சொல்லுக்கு நாம் ஆளாக கூடாது.

அடாவடியான தேர்தல் முறை மாற்றத்துக்கு எதிராக தேசிய, சர்வதேசிய போராட்டங்களை நாம் முன்னெடுக்க, ஆளும்கட்சி, எதிர்க்கட்சி பேதங்களை கலைந்து விட்டு, தமிழ் பேசும் அரசியலர் முன்வர வேண்டும்.

இந்த தேர்தல் முறைமை சீர்திருத்த கலந்துரையாடல்களில் கடந்த பத்து வருடங்களுக்கு மேல் தொடர்புற்றவன் என்ற முறையில் நான் இதை கூறுகிறேன்.

இதுவே மனோ கணேசனின் முழுமையான பதிவு. அவரின் இந்த அறைகூவல் அனைவரின் கவனத்தையும் பெறவேண்டும்.

**- ஊர்க்குருவி.**

ஈழநாடு
Eelanadu
09.05.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, சித்திரை 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தமிழர் அரசியலின் நிலை?

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில், யாரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தலாம் - அவர்களுக்கான தகுதி எத்தகையது என்றவாறான விவாதங்கள், சமீப நாட்கள்வரையில் தமிழ் அரசியல் பரப்பை ஆக்கிரமித்திருந்தது. மாவை சேனாதிராசாவின் தகுதியென்ன என்பதில் ஆரம்பித்த விவாதம் பின்னர், துறவி வேலனை பொதுவேட்பாளராக நிறுத்தலாமென்னும் விவாதமாக மாறி, இறுதியில் வடக்கு கிழக்கு இணைந்தால், நான் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவேன் என்றவாறு, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கின் கூறியது வரைக்கும், இந்த மாகாண சபை விவகாரம் சுவாரஸ்யமான பேச்சுக்களாக தொடர்ந்தது. அடிக்கடி ஊடகங்களுக்கு தீனியாகியது.

பொதுவாகவே ஜெனிவா கூட்டத் தொடர், தேர்தல் என்றால் மட்டுமே அரசியல் பேசத் தொடங்கும், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அனைவருமே, மாகாண சபை தேர்தலை இலக்குவைக்கும் அரசியலை ஆரம்பித்திருந்தனர். ஒவ்வொருவரும் தங்களின் கட்சியில் பொருத்தமான வேட்பாளர்கள் இருக்கின்றனர் என்பதை காண்பிக்கும் போட்டியில் இறங்குவதற்கு தயாராகிக்கொண்டிருந்தனர். ஆனால் நாடு தற்போது எதிர்கொண்டிருக்கின்ற நிலையில், இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்பது தற்போது வெள்ளிடைமலை. இந்த நிலையில், மாகாண சபைத் தேர்தல் வரைக்கும் நமது அரசியல்வாதிகள் என்ன செய்யப் போகின்றனர்?

2009இற்கு பின்னரான தமிழ் அரசியல் என்பது, திருவிழாவில் கூடும் மக்களின் மனோநிலைக்கு ஒப்பானது. ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் நெருங்கும் வேளையில், அனைவருமே சர்வதேச அரசியல் தொடர்பில் பேசத் தொடங்கிவிடுவர். பெப்ரவரியில் ஆரம்பிக்கும் ஜெனிவா கொண்டாட்டமானது, மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நீடிக்கும் வரையில் தொடரும். அதன் பின்னர், பேரவையில் இடம்பெற்ற விடயங்களுக்கு உரிமைகோரும் போட்டிகள் ஆகக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று வாரங்கள் தொடரும். பின்னர் ஜெனிவா, சர்வதேசம் என்னும் சொற்களை அடுத்த ஆண்டு பெப்ரவரியில்தான் மக்கள் கேட்கமுடியும்.

அதேபோன்றுதான், பாராளுமன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறுவதற்காக திகதி அறிவிக்கப்பட்டுவிட்டால், அதன் பின்னர் சில மாதங்கள் தேர்தல் திருவிழாக் கொண்டாட்டங்களுடன் காலம் கழியும். எவையெல்லாம் சாத்தியமில்லையோ அவைகள் அனைத்தும் தேர்தல் மேடைகளில் ஒலிக்கும். தேர்தல் முடிந்ததும் தேசிய பட்டியல். மாகாண சபையென்றால், யாருக்கு எந்த அமைச்சு என்பவற்றில் சில வாரங்கள் இழுபறியேற்படும்.

அதுவரைக்கும் ஒற்றுமைபற்றியும் கொள்கைபற்றியும் உரத்துப் பேசிக்கொண்டிருந்த நமது தலைவர்கள் அனைவருமே, அமைச்சுப் பொறுப்புகளுக்காக சண்டையிடுவர். ஒருவரையொருவர் எவ்வாறு ஏமாற்றலாமென்று திட்டம் தீட்டுவர். ஆனால், இவ்வாறு மாகாண சபைக்காக சண்டையிடும் அரசியல்வாதிகளோ மறுபுறமாக, மாகாண சபையில் ஒன்றுமில்லை - அதனைக்கொண்டு எதனையும் செய்ய முடியாதென்றும் கோஷமிடுவர்.

மாகாண சபையில் ஒன்றுமில்லையென்றால், பின்னர் எதற்காக முதலமைச்சர் வேட்பாளர் விடயத்தில் சண்டையிடவேண்டும்? அமைச்சர்களுக்காக மோதவேண்டும்? ஆசனத்திற்காக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளவேண்டும்? ஒன்றுமில்லாத இடத்தில் எதற்காக பதவிகளில் இருக்க வேண்டும்? அங்கு கிடைக்கும் சலுகைகளை அனுபவிக்கவேண்டும்? இதில் ஒரு கேள்விக்குக்கூட தமிழ் தலைவர்கள் என்போரிடம் பதிலிருக்காது. தாயுமானவர் சுவாமிகள் கூறியதுபோன்று, ‘நாமொன்றும் அறியோம் பராபரமே’ - என்றவாறு, தமிழ் மக்கள் விழிபிதுங்கிக் கிடப்பர். இவ்வளவுதானா தமிழர் அரசியல்?

# ‘தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது’: மாவையிடம் மட்டும் சமல் கூறினால் போதாது

- அலசுவது இராஜதந்திரி -





அநீதியான சூழ்நிலைகளிலேயே இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் தமிழ் மக்கள் இன்றுவரை வாழ்ந்து வருகின்ற நிலையில், இரு தினங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சித் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவிடம், தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது என்று இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபையினால் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் வெளியிடத்தவர்களின் குடியேற்றம் மற்றும் நிலஅபகரிப்பு என்பவை சம்பந்தமாக இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் மாவை சேனாதிராஜா முறையிட்டிருந்தார். அச்சமயத்திலேயே, தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது என சமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

வடக்கு-கிழக்கின் பூர்வீக தமிழ் கிராமங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் இன்று நேற்றல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் வாழைப்பழத்தில் ஊசி குற்றுவது போல, நாசுக்காக மேற்கொள்ளப்பட்டே வந்திருந்தன.

**இந்திய அமைதிப்படை நடவடிக்கை**

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து, இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாகாணசபை ஆட்சி முறையை அமுல்படுத்த வந்திருந்த இந்திய அமைதிகாக்கும் படையினர், வடக்கு-கிழக்கில் அத்துமீறிய குடியேற்றங்கள் பலவற்றை அகற்றியிருந்தனர். ஆனால், இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தோல்வி - இந்திய அமைதிப் படையினர் வெளியேற்றம் - இதனையடுத்து, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசபடையினருக்குமிடையே மீளவும் வெடித்த யுத்தம் - மற்றும், புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் என்பவற்றையடுத்து, தமிழர்களின் பூர்வீக நிலப்பிரதேசங்களில் மீளவும் வெளிமாவட்டத்தவரது குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதையே அவதானிக்க முடிகின்றது. இதன்மூலம், தமிழ் மக்களது பூர்வீக நிலப்பிரதேசங்கள் என்ற நிலையைமாற்றி, அவர்களது தனித்துவங்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளே நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், யுத்த காலங்களில் போடப்பட்டிருந்த ஆயுதப்படை முகாம்கள் இன்றுவரை முழுஅளவில் அகற்றப்படாமல் இருந்து வருகின்றன. இந்நிலையில், தற்போது புதிய குடியேற்றங்களுக்கு அரசு திட்டங்களை தீட்டிவருவது தமது பூர்வீக நிலப்பிரதேசங்கள் குறித்து தமிழ் மக்களை கவலைகொள்ள வைத்துள்ளது.

**சமல் ராஜபக்ஷ**

எனவே, இதுகுறித்து இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் முறையிட்டபோதே அவர் தமிழ் மக்களுக்கு எவ்வித அநீதியும் இழைக்கப்படமாட்டாது என குறிப்பிட்டுள்ளார். சமல் ராஜபக்ஷ, , இன்றைய பிரதமர், ஜனாதிபதி ஆகியோரின் மூத்த சகோதரராவார். ஒரு முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டரான சமல் ராஜபக்ஷ, பின்னர் அரசியலில் ஈடுபட்டு தற்போது அரசில் இராஜாங்க அமைச்சராக இருந்துவருகின்றார். தமிழ் தேசிய தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம், தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது என்று சமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆனால், தமிழ் மக்கள் சகல விதத்திலும் அநீதிகளால் சூழப்பட்ட நிலையில் இருந்து வரும் நிலையில், அவர்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது எனக் குறிப்பிடப்பட்டிருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

மாவை சேனாதிராஜா முறையிட்ட முல்லைத்தீவி, மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கபட்டுள்ள நில அபகரிப்பு மட்டுமல்ல,

மூன்று தசாப்த கால யுத்தத்தினால் ஏற்பட்ட எண்ணிலடங்காத அநீதிகளுக்கு தீர்வு கிடைக்காமல் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் இருந்து வருவதையே காணமுடிகிறது.


**அநீதிகள்**

வடக்கு-கிழக்கில் காணாமல் போனோரின் ஆயிரக்கணக்கான உறுவுகள் தமக்கு நீதி வேண்டியும், தமது உறவுகளை கண்டுபிடித்துத் தரும்படியும் தினந்தோறும் இடையறாது குரலெழுப்பி வருகின்றனர். இதுதவிர, ஏராளமான தமிழ் இளைஞர்கள் இதுவரை எவ்வித விசாரணைகளுமின்றி பல வருடங்களாக சிறையிலடைக்கப்பட்ட நியைிலிருந்து வருகின்றனர். யுத்தக்குற்றங்கள் என்று கண்டறியப்பட்டவை குறித்து நீதிவேண்டி நிற்கும் மக்களுக்கும் நீதி கிடைக்காதிருக்கின்றது.

இவ்வகையில், இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது என குறிப்பிட்டிருப்பது வேடிக்கைக்குரிய ஒரு கூற்றாகவே இருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது என்று சமல் ராஜபக்ஷ தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜவிடம் மட்டும் கூறினால் போதாது. ஏற்கனவே, தமிழ் மக்கள்மீதான அநீதிகள் என்று கண்டறியப்பட்டவற்றுக்கு தீர்வுகாண அவர் முன்வரவேண்டும். அத்துடன், தாம் சார்ந்துள்ள, தமது சகோதரர்கள் நடத்துகின்ற ஆட்சியிலும் தமிழர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டியதை சமல் ராஜபக்ஷ இடித்துரைக்க வேண்டியவராகின்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



**மே - 10 திங்கட்கிழமை**
**பிலவ வருடம் - சித்திரை - 27**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 6.00 - 7.30 |
| ராகு காலம் | : | 7.30 - 9.00 |
| திதி | : | சதுர்த்தசி |



## இன்றைய ராசிபலன்

**10.05.2021**

**மேடம்**
பணியாளர்கள் சாதனைச் செயல்களால் பாராட்டுப் பெறுவீர்கள். திட்டமிடாத செயல்கள் நடைபெறும். நட்பு உறுதியாகும். நிம்மதி பிறக்கும். பெரிய மனிதர்களின் ஆதரவு உண்டு.

**இடபம்**
வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். பக்தி அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதலாக உழைத்து நல்ல பலன் அடைவீர்கள். இளைஞர்களுக்கு அனுபவசாலிகளின் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்**
வாழ்க்கை வசதிகள் பெருகுவதால் சுகம் அதிகரிக்கும். கட்டடங்கள் மூலம் வருமானம் இருக்கும். சிக்கல் வரும். பண விஷயத்தில் நேர்மையாக நடந்து நிம்மதி அடைவீர்கள்.

**கடகம்**
அலுவலக வேலையில் முழுக் கவனம் செலுத்த வேண்டும். இன்று புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி வரும். கடன் குறையும். பெண்கள் நல்ல செயல்கள் செய்து பாராட்டுப் பெறுவார்கள்.

**சிம்மம்**
பணியாளர்கள் உழைப்புக்கு ஏற்ற உரிய பலனை பெறுவீர்கள். திட்டமிட்ட விஷயத்தில் தடை உண்டாகி எரிச்சல் ஏற்படுத்தும். அநாவசிய விஷயங்களுக்கு பயந்து பிறகு தெளிவு பெறுவீர்கள்.

**கன்னி**
நீண்ட நாள் மனக்குழப்பம் நீங்கும். நட்பு வட்டம் விரியும். பணியிடத்தில் உடனிருப்பவர்களினால் ஏற்பட்ட தொல்லைகள் தீரும். குடும்பத்தினர் உங்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பர்.

**துலாம்**
குடும்ப நபர் ஒருவரின் ஆதரவால் திட்டம் ஒன்று நிறைவேறும். நல்லவர்களைச் சந்தித்து நன்மை பெறுவீர்கள். கடன் தீரும். தைரியமான செயல் செய்து வெற்றிக்கு அடிகோலுவீர்கள்.

**விருட்சிகம்**
முன்னேற்றத்திற்கு உதவிய சிலரிடம் நன்றி பாராட்டுவீர்கள். தெய்வத் திருப்பணிக்காக சிறு தொகை அளித்து நிறைவடைவீர்கள். எதிர்பாலினத்தினரின் உதவியால் நன்மை ஒன்று ஏற்படும்.

**தனுசு**
கவனத்துடன் எதையும் செய்வதால் சாதகமான பலன் கிடைக்கும். நெருங்கிய ஒருவருடன் உரையாடுவது திருப்தி அளிக்கும். அனுபவசாலிகளின் ஆலோசனையை மறுக்காமல் ஏற்பது நல்லது.

**மகரம்**
குடும்பத்தில் நிலவி வந்த குழப்பத்தை நீக்குவீர்கள். எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் நலன்கள் அதிகரிக்கும். நீண்ட நாளாக இருந்து வந்த பயம் நீங்கும். பகை விலகும்.

**கும்பம்**
இளைஞர்கள் எதிர்பார்த்திருந்த வெற்றி, உழைப்பால் கிடைக்கும். எதிர்மறை எண்ணங்கள் எழும். தேவையற்ற கவலைகள் அதிகரிக்கும். பொழுது போக்கில் கவனம் செலுத்த நேரம் இருக்காது.

**மீனம்**
வியப்பூட்டும் சுபச்செய்தி ஒன்று வரும். பரபரப்பான நாள். பகையைத் தவிர்க்க வேண்டும். வம்பில் ஈடுபட வேண்டாம். ஒதுங்கி இருந்த நண்பர்கள் இன்று நட்புக்கரம் நீட்டுவார்கள்.

# சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் யார்? ஓ.பி.எஸ். – எடப்பாடி கடும் போட்டி!

## அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் இழுபறியில் முடிவு

சென்னை, மே 10

தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரை தேர்வு செய்வது தொடர்பாக சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக நடந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் எந்த முடிவும்எட்டப்படவில்லை. தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது. ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகிய இருதரப்பினரிடையே உருவாகியுள்ள போட்டியே இந்த நிலைக்கு காரணம்.



தமிழக சட்டசபை அ.தி.மு.க. கூட்டணி 234 தொகுதிகளில் போட்டியிட்டு 75 தொகுதிகளை கைப்பற்றியது. இதில் அ.தி.மு.க. மட்டும் 65 தொகுதிகளிலும், அ.தி.மு.க.வின் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்ட புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் பூவை ஜெகன்மூர்த்தியும் வெற்றி பெற்று இருந்தனர். இதுதவிர கூட்டணி கட்சிகளாக பா.ம.க. 5 தொகுதிகளிலும், பா.ஜ.க. 4 தொகுதிகளிலும் வெற்றியை பதிவு செய்திருந்தது.

தேர்தலில்வெற்றி பெற்றுதி.மு.க. ஆட்சி அமைத்து இருக்கிறது. அதேபோல், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அ.தி.மு.க. இடம் பெற்று இருக்கிறது. எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் அ.தி.மு.க. தரப்பில் இருந்து தலைவர் ஒருவர் தேர்வு செய்யப்பட வேண்டும்.

அந்த வகையில் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராக யார் தேர்வு செய்யப்படுவார் என்பது பெரிய கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. அ.தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்து வரும் பா.ஜ.க.வின் மகளிர் அணி தேசிய தலைவரும், எம்.எல்.ஏ.வுமான வானதி சீனிவாசன், ‘எதிர்க்கட்சி தலைவர் யார்? என்பதை பா.ஜ.க. முடிவு செய்யும்’ என்று கூறினார்.

இப்படிப்பட்ட நிலையில், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரை தேர்வு செய்வது தொடர்பாக, அ.தி.மு.க. தரப்பில் எம்.எல்.ஏ.க்களின் ஆலோசனை கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கு கட்சி ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தலைமை ஏற்றனர்.

கூட்டம் தொடங்குவதற்கு முன்பு ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி, கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், பா.வளர்மதி, எஸ்.தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, செங்கோட்டையன், மனோஜ் பாண்டியன், நத்தம் விஸ்வநாதன் உள்பட முக்கிய நிர்வாகிகள் சிலர் தனி அறையில் கூடி ஆலோசனை நடத்தினர். கூட்டத்தில் சட்டமன்ற அ.தி.மு.க. தலைவராக (எதிர்க்கட்சி தலைவராக) யாரை தேர்வு செய்வது? கொறடாவாக யாரை நியமிப்பது? என்பது பற்றி காரசாரமாக விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த கூட்டம் சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது. அதில் எடுக்கப்பட்ட சில முக்கிய முடிவுகளின் அடிப்படையில், அதன் பின்னர் எம்.எல்.ஏ.க்களுடன் சுமார் 30 நிமிடம் ஆலோசனை நடத்தினர்.

ஆனாலும் இந்த கூட்டத்தில் எந்த முடிவும்எட்டப்படவில்லை. ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி இரு தரப்பினரிடையே ஒத்த கருத்து எழாத காரணத்தினால் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரை தேர்வு செய்வதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது.

இதையடுத்து இன்று திங்கட்கிழமை மீண்டும் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெற இருப்பதாகவும், அதில் இறுதி முடிவு எட்டப்பட இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

### மதுரையில் ஓராண்டுக்கும் மேலாக

## முன்களப்பணியாற்றிய கர்ப்பிணி மருத்துவர் கொரோனாவுக்கு பலி

மதுரை, மே 10

மதுரையில் கொரனோவால் பாதிக்கப்பட்ட 8 மாத கர்ப்பிணி மருத்துவர் உயிரிழந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மதுரையைச் சேர்ந்த கர்ப்பிணி மருத்துவர் சண்முகப்பிரியா கொரோனா தொற்றால் மறைந்ததற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.



மதுரை அனுப்பானடி நகர்ப்புற சுகாதார நிலையத்தில்மருத்துவ அலுவலராக பணியாற்றி வந்த 8 மாத கர்ப்பிணியான மருத்துவர் சண்முகப்பிரியாவிற்கு கடந்த 10 நாட்களுக்கு முன் கொரோனோ தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சில நாட்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். கொரோனோ பாதிப்பைத் தொடர்ந்து 90 வீதத்துக்கும் மேல் நுரையீரல் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கர்ப்பிணி என்பதால் அவர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என கூறப்படுகிறது.

கடந்த ஓராண்டாக கொரோனோ தடுப்பு பணியில் ஈடுபட்டுவந்த 8 மாத கர்ப்பிணி அரசு மருத்துவர் கொரோனோ தொற்றால் உயிரிழந்துள்ள சம்பவம் சக மருத்துவ ஊழியர்களை சோகத்தை ஆழ்த்தியுள்ளது.

முன்களப் பணியாளராகச் சிறப்பாகப் பணியாற்றிய மருத்துவர் சண்முகப்பிரியாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், முன்களப்பணி வீரராக - அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அரும்பணி ஆற்றிய இளம் மருத்துவரை இழந்திருப்பது ஆழ்ந்த வேதனை தருகிறது. மருத்துவர்கள் மற்றும் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு மற்றும் சிகிச்சை பணியில் முன்களப்பணி வீரர்களாக நிற்கும் அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்திட அறிவுறுத்தி இருக்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்துக்கு வழங்கும் ஒட்சிசன் அளவை அதிகரித்தது மத்திய அரசு

### முதலமைச்சர் ஸ்டாலினின் கோரிக்கை ஏற்கப்பட்டது

சென்னை, மே 10

தமிழகத்துக்குக் கூடுதலாக ஒட்சிசன் வழங்க வேண்டும் என்ற முதல்வர் மு.க.ஸ்டாலினின் கோரிக்கையை ஏற்று தமிழகத்துக்கான ஒட்சிசன் அளவை 419 டன்னாக உயர்த்தியிருக்கிறது மத்திய அரசு.

கொரோனா பரவி வரும் நிலையில், வடமாநிலங்கள் போன்று தமிழகத்திலும் ஒட்சிசன் தட்டுப்பாட்டால், உயிரிழப்பு ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில், புதிய முதல்வராகப் பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடிக்குக் கடிதம் ஒன்றை எழுதினார். அதில், மாநிலத்தில் தினசரி ஒட்சிசன் நுகர்வு என்பது 440 மெட்ரிக் டன் ஆக உள்ள நிலையில், 220 மெட்ரிக் டன் மட்டுமே தேசிய ஒட்சிசன் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இந்த அளவை உயர்த்தி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

மேலும் நேற்று முன்தினம் கொரோனா பாதிப்பு அதிகமுள்ள மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு என 4 மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடினார்.

அப்போதும், தமிழ்நாட்டின் முக்கிய கோரிக்கையான ஆக்சிஜன் அளவை உயர்த்த வேண்டும். ஒட்சிசன் ஒதுக்கீட்டை 500 மெட்ரிக் டன்னாக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் முதல்வர் கேட்டுக்கொண்டார்.

அதை உடனடியாகப் பரிசீலிப்பதாகப் பிரதமர் மோடியும் உறுதியளித்திருந்தார். இந்த நிலையில், தமிழகத்துக்கான ஒட்சிசன் ஒதுக்கீட்டை 419 மெட்ரிக்டன்னாக உயர்த்தி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.





## முகக்கவசம் அணியாதோரை தூக்கி சென்றனர் பொலிஸார்!

கொழும்பு, மே 10
பொலிஸ் தலைமை அதிகாரி சந்தன ஜயதிலகவின் தலைமையில் சுகாதார நடைமுறைகளை கண்காணிப்பதற்கான விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை நகரப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின்போது முகக் கவசம் அணியாதோர் மற்றும் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாத 30இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அத்துடன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத சிலரை பொலிஸார் தூக்கி சென்று வாகனத்தில் ஏற்றிய சம்பவமும் இடம்பெற்றதாக கூறப்பட்டது.

# கட்டுப்பாட்டையிழந்த பஸ் வீதியில் இருந்து விலகியது!

## கைதடியில் நேற்று சம்பவம்

**யாழ்ப்பாணம்,மே10**
**வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்று கட்டுப்பாட்டையிழந்து வீதியைவிட்டு விலகிச் சென்றுள்ளது. அதனால் எதிரே பயணித்த 4 வாகனங்கள் சடுதியாக பிரேக் செய்ததால் பின்னே சென்ற டிப்பர் வீதியைவிட்டு விலக முற்பட்ட போதும் சாரதியினால் கட்டுப்படுத்தப் பட்டது.**

இந்தச் சம்பவத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

கைதடி பாலத்துக்கும் - பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் ஏ-9 வீதியில் இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றது.

'காரைநகர் சாலைக்குச் சொந்தமான பஸ் ஏ-9 கண்டி வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு பயணித்துள்ளது. கைதடிப் பாலத்தைக் கடக்கும் போது வேகக் கட்டுப்பாட்டையிழந்த பஸ் வீதியைவிட்டு விலகிச் சென்றுள்ளது.



பஸ் தடுமாறிப் பயணித்ததால் எதிரே பயணித்த வாகனங்கள் சடுதியாக பிரேக் செய்ததால் பின்னே சென்ற டிப்பர் வீதியிலிருந்து விலக முற்பட்ட போதும் சாரதியால் கட்டுப் படுத்தப்பட்டது.

கடும் மழை பொழிந்து கொண்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து பஸ்ஸில் பயணித்தவர்கள் மற்றொரு பஸ்ஸில் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

## குரங்குகள் அட்டகாசம்!

மட்டக்களப்பு, மே 10
கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் குரங்குகளின் அட்டாகசம் அதிகரித்துள்ள நிலையில் வாழைச்சேனை ஹைறாத் வீதியில் வீடு ஒன்றை சேதப்படுத்திய சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பிரதேசத்தில் சில மாதங்களாக குரங்குகளில் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது. பிரதேசத்தில் காணப்படும் பயன்தரும் மரங்கள் மற்றும் வீட்டு கூரைகள் என்பவற்றை அவை சேதப்படுத்தி வருகின்றன.

எனவே வாழைச்சேனை பிரதேசத்தில் தொடர்ச்சியாக குரங்குகளில் வருகை இடம்பெற்று வருவதால் மக்களின் பாதுகாப்பு கருதியும், குரங்குகளின் உயிரை பாதுகாக்கும் வகையிலும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

## கொரோனா தொற்றுக்கு உள்ளாகிய மாணவனை ரகசியமாக பரீட்சைக்கு அழைத்து சென்ற மாமா!

கொழும்பு, மே 10
கொரோனா தொற்றுக்குள்ளான தனது 14 வயது மருமகனை, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்ற இலண்டன் ஓ.எல் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அழைத்துச் சென்ற மாமா முறையான ஒருவருக்கும் அவரது மருமகனுக்கும் எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ், வழக்குத் தொடர உள்ளதாக, கஹதுட்டுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர், மத்தேகொட- பண்டாரநாயக்கபுர பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்ட வீடொன்றுக்கு இரகசியமாக வந்துள்ளார். அங்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், வைத்தியசாலைக்குச் செல்லும் எதிர்பார்ப்பில் இருந்த 14 வயது சிறுவனை மோட்டார் சைக்கிளில் அழைத்துக்கொண்டு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்குச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த மாணவன், பரீட்சைக்குத் தோற்றியதை, அதே பாடசாலையில் கல்வி பயிலும் மற்றுமொரு மாணவன் கண்டுள்ளார்.

அத தனது தந்தைக்கு தெரிவித்ததையடுத்து, இந்த விடயம் உறுதியானது.

இதற்கமைய, தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் இருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சர்வதேச பாடசாலை ஒன்றால் ஏற்பாடு செய்யப்பட்ட பரீட்சையிலேயே குறித்த மாணவன் தோற்றியுள்ளார்.

அப்பரீட்சையில், சுமார் 6இ000 மாணவர்கள் பல சந்தர்ப்பங்களில் தோற்றியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த விவகாரத்தையடுத்து, கேம்பிரிட்ஜ் சர்வதேச கல்வி நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பரீட்சையை நிறுத்தியிருந்தது.

## 147 இடங்களில் மண் சரிவு அபாயம்

கொழும்பு, மே. 10
இலங்கையில் 147 இடங்களில் மண் சரிவு அபாயம் உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் மண்சரிவு அபாயம் மிகுந்த 147 பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

நம்புக்கனை முதல் பதுளை வரையான மலையக ரயில் மார்க்கத்தில் 22 இடங்களும் இவற்றுள் உள்ளடங்குவதாக நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த பகுதிகளிலுள்ள ரயில் மார்க்கத்தில்இ நிலச்சரிவு மற்றும் கற்பாறைகள் வீழ்வதை தடுப்பதற்கு பாதுகாப்பான வேலிகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் சிரேஷ்ட அதிகாரியாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, களுத்துறை, மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் மண்சரிவு அபாயம் மிகுந்த பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியுன் நிதியுதவியின் கீழ், மண் சரிவு அபாயமிக்க பகுதிகளில் பாதுகாப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கொடிகாமம் - பருத்தித்துறை வீதி போக்குவரத்துக்காக திறப்பு

யாழ்ப்பாணம், மே. 10
கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதி பொதுமக்களின் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக கொடிகாமம் வடக்கு மற்றும் மத்தி ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகள் கடந்த 5ஆம் திகதி முதல் முடக்கப்பட்டுள்ளன.

அதனால் அப்பகுதி ஊடாக செல்லும் கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதி கடந்த 3 நாட்களாக மூடப்பட்டு இருந்தமையால், குறித்த வீதியினால் பயணம் செய்த பலரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துஇ பல கிலோ மீற்றர் தூரம் சுற்றி பயணிக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

இது குறித்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, 'பிரதான வீதிகளினூடான போக்குவரத்தினை தடை செய்யவில்லை எனவும், குறித்த இரு கிராமங்களுக்குள் உட்செல்ல, வெளியேற மாத்திரமே தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இந்நிலையில் தற்போது குறித்த வீதி ஊடாக போக்குவரத்துக்கு இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

அதேவேளை, கொடிகாமம் மத்தி மற்றும் வடக்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளும் தொடர்ந்து முடக்கத்தில் உள்ளதாகவும், குறித்த இரு கிராமத்துக்குள் உட்செல்லவோ, வெளியேறவோ அனுமதி இல்லை எனவும், அப்பகுதி ஊடாக செல்லும் குறித்த வீதியின் ஊடாக போக்குவரத்து செய்வதற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மாநகரசபை செயல்பாடுகளைக்கூட பயங்கரவாதமாக பார்க்கிறது அரசு!

## யாழ். மேயர் மணிவண்ணன் குற்றச்சாட்டு



**யாழ்ப்பாணம், மே 10**

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் சாதாரண செயல்பாடுகளை கூட பயங்கரவாத செயல்பாடுகளாக அரசு சித்தரிக்கின்றது என்று யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.**

இதன் ஒரு அங்கமாகவே யாழ்.மாநகர சபையின் தண்டம் அறவிடும் பணியாளர்கள் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான செயல்பாடுகள் மூலம் தமிழர்களையும், தாயகத்தையும் அச்சமான சூழ் நிலையில் வைத்திருக்க அரசு எடுக்கும் முயற்சியை கைவிட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ்.மாநகர சபையின் தண்டம் அறவிடும் பணியாளர்கள் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: -

யாழ்ப்பாணம் மாநகர சபையின் செயற்பாடுகளை முடக்கும் வகையான செயல்பாடுகளை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

என்னை கைது செய்ததன் மூலம் சபையினால் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளை முழுமையாக முடக்கிவிடலாம் என்றே அரசு நினைத்தது.

ஆனாலும், அரசாங்கத்தின் சட்டத்துக்கு முரணான செயல்பாடுகளை எதிர்த்து கட்சி பேதங்கள் இன்றி அனைத்து தரப்பினர்களும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பை வெளிப்படுத்தியதன் காரணமாக அரசின் திட்டம் கைகூடவில்லை.

இதன் தொடர்ச்சியாக இப்போது சபையின் தண்டம் அறவிடும் பணியாளர்கள் நான்காம் மாடிக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணை அழைப்பு என்பது தமிழ் மக்களுக்கு அரசாங்கம் விடும் அச்சுறுத்தலாகவே பார்க்கப்பட வேண்டும்.

தமிழர் தாயகத்தி நன்மைகளுக்காக முன்னின்று செயல்படுபவர்களையும், அவர்களுடன் இனைந்து பயணிப்பவர்களையும் இல்லாமல் செய்யும் நடவடிகையையே அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

விசாரணைக்கு அழைக்கப்பட்ட பணியாளர்களுக்கு வேண்டிய சட்ட உதவிகளை, மாநகர முதல்வராகவும், சட்டத்தரணியாகவும் நிச்சயம் செய்வேன்-என்றார்.



# விபத்தில் காயமடைந்த சிறுத்தையை காப்பாற்றிய கிளிநொச்சி பொலிஸார்

கிளிநொச்சி, மே 10

வீதி விபத்தில் காயமடைந்த சிறுத்தையை பொலிஸார் காப்பாற்றி பாதுகாப்பாக காட்டினுள் அனுப்பிய சம்பவம் கிளிநொச்சியில் பதிவாகியுள்ளது.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் நேற்று பிற்பகல் சிறுத்தை ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட வேளை விபத்துக்குள்ளாகியுள்ளது.

சிறுத்தை வீதியால் சென்ற டிப்பர் வாகனத்தில் மோதுண்டு படுகாயமடைந்தது.

அந்த சிறுத்தை பொலிஸாரால் மீட்கப்பட்டு முதலுதவி சிகிச்சைகள் அளிக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பாக அருகில் உள்ள காட்டுப்பகுதியில் விடப்பட்டது.

# நாட்டில் தொற்றால் உயிரிழந்த ஆண்களின் எண்ணிக்கை 492!

கொழும்பு, மே 10

இலங்கையில் கடந்த 02ஆம் திகதியில் இருந்து நேற்று வரை 88 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 786 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 492 பேர் ஆண்கள் எனவும் 294 பேர் பெண்கள் எனவும் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

# ஷம்போவுக்குள் கொக்ஹெய்ன்!

கொழும்பு, மே 10

60 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்ஹெய்ன் போதைப் பொருள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று காலை 9 மணியளவில் சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளதென சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளரும் பிரதி சுங்க பணிப்பாளருமான சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த கொக்ஹெய்ன் போதைப் பொருளுடன் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 59 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளாரென்றும் இச்சந்தேகநபர் நைரோபி நகரிலிருந்து டோஹாவுக்கு வருகைத் தந்து, அங்கிருந்து கட்டார் விமான சேவை மூலம் கட்டுநாயக்கவுக்கு வருகைத் தந்துள்ளாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது பயணப்பையில் இருந்த 2 ஷம்போ போத்தல்களில் 2.29 கிலோகிராம் கொக்ஹெய்ன் போதைப் பொருள் மறைத்த வைக்கப்பட்டிருந்ததாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும்தான் அனலைதீவு, எழுவைதீவுக்கு படகு சேவை

யாழ்ப்பாணம், மே 10

தற்போதைய நிலையைக் கருத்திற் கொண்டு அனலைதீவு, எழுவைதீவிற்குள் அங்கு தற்போது வசிப்போரும் அத்தியாவசிய சேவை வழங்குபவர்களும் மாத்திரமே படகு பிரயாணித்தினை மேற்கொள்ள முடியும் என ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி, தவிசாளர், பிரதேச செயலர் இணைந்து தீர்மானித்துள்ளனர்.

இன்று முதல் மறு அறிவித்தல் வரை இந் நிலை நடைமுறைப்படுத்தப்படும்.

இத்தீவுகளில் தற்போது மிகவும் மட்டுபடுத்தப்பட்ட மருத்துவ வசதிகளே காணப்படுகின்றன. அத்தோடு கொரோனா நோயாளிகளை அங்கிருந்து பிரதான நிலப்பிரப்பிற்கு இடமாற்றம் செய்வதிலும் பலத்த இடர்பாடுகள் உள்ளன.

இப்பிரதேசங்களில் இது வரை நோயாளிகள் இனங்காணப்படாத நிலையில் இப்பிரதேச மக்களை பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையே இதுவாகும் என ஊர்காவற்றுறை பிரதேச கொரோனா தடுப்புச் செயலணி தீர்மானித்துள்ளது.

# கொரோனா உயிரிழப்புக்கள் குறித்து தவறான தகவல்களை அரசாங்கம் வெளியிடுகின்றது

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, மே 10

கொரோனாவால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து பொய்யான புள்ளிவிபரங்களை வெளியிடுவதன் மூலமும் பி.சி.ஆர். சோதனைகளை குறைப்பதன் மூலம் அரசாங்கம் பொதுமக்களின் உயிரிழப்புகளுடன் விளையாடுகின்றது என ஜேவிபி குற்றம்சாட்டியுள்ளது.

கொரோனாவைரசினால் உயிரிழக்கும் நோயாளிகளின் விபரங்களை வெளியிடுவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளின் ஜயதிச தெரிவித்துள்ளார்.

கொரோனாவைரசினால் உயிரிழந்தவர்களின் விபரங்களை மாத்திரம் வெளியிடுகின்றோம்.

கொரோனாவைரசினால் தீவிரமடைந்த ஏனைய நோய்களினால் உயிரிழந்தவர்களின் விபரங்களை வெளியிடுவதில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார் என ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குற்றம்சாட்டியுள்ளார்.

சுகாதார பணியாளர்களிற்கு முன்னுரிமை வழங்காமல் அரசியல் ரீதியில் செல்வாக்கு பெற்றவர்களிற்கு இரண்டாவது டோஸினை வழங்குகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# போதைக்கு அடிமையானவர்களுக்கு சிறையில் அடைக்காமல் மறுவாழ்வு

கொழும்பு, மே 10

போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்களை சிறையில் அடைக்காமல் மறுவாழ்வு அளிப்பதில் பொது பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அச்சம் மற்றும் சந்தேகம் இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்கும் பொருட்டு சமூகத்திலிருந்து போதைப்பொருள்களை அகற்றுவது குறித்து பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தலைமையில் நடந்த கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்திற்காக ஒரு திட்டத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிறைகளில் அடைத்தல், சமுதாயத்தில் மீண்டும் ஒன்றிணைத்தல் மற்றும் போதைக்கு அடிமையான



நபர்களின் மறுவாழ்வு என மூன்று பிரிவுகளாகப் பிரித்து முடிவை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில்

## கொரோனா அச்சம் நீங்க வேண்டி குடாநாட்டில் விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம், மே 10

இலங்கையிலும் இந்தியாவிலும் நிலவும் கொரோனா அச்சம் நீங்க வேண்டி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரம் கோயில் ஆகியவற்றிலேயே நேற்றுமுன்தினம் மாலை இந்த விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த வழிபாடுகளில் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத்தூதுவர் பாலச்சந்திரன் உள்ளிட்ட அதிகாரிகளும், யாழ். மாவட்ட அரசியல்வாதிகளான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோருடன் மேலும் சிலர் கலந்துகொண்டனர். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 426 பேர் கைது

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே10

**இலங்கையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் பேரில் மேலும் 426 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**



நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணிக்கு நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதுவரையான காலப்பகுதியில் 6,965 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை)முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது 657 விற்பனையாளர்கள் சோதனை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுள் தெரிவு செய்யப்பட்ட 114 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# மேலும் 40 புதிய அரசியல் கட்சிகள்

## பதிவுக்காக விண்ணம் என்கின்றார் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்

கொழும்பு, மே 10

40 புதிய அரசியல் கட்சிகள் பதிவுக்காக விண்ணப்பித்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இவற்றில்18 கட்சிகள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டுள்ளன.

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறியுள்ளார். (இ)



# கோர விபத்தில் ஒருவர் பலி நான்கு பேர் கவலைக்கிடம்!

நொச்சியாகம, மே 10

அநுராதபுரம் - திருகோணமலை பிரதான வீதியின் நொச்சியாகம மொரகந்த பிரதேசத்தில் புத்தளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கொள்கலன் வாகனம் ஒன்று மேலும் சில வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதிக வேகத்தில் பயணித்துள்ள கொள்கலன் வாகனம், இரண்டு மோட்டார் சைக்கிள்களுடனும், சைக்கிள் ஒன்றுடனும் மோதியுள்ளது.

பின்னர் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய ரக லொறி ஒன்றுடன் மோதி, அருகில் இருந்த பாதுகாப்புச் சுவர் மற்றும் மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நான்கு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் நொச்சியாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் நொச்சியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# 6 வைத்தியசாலைகளை புதிதாக அமைக்க முடிவு

## மேலும் 60 ஆயிரம் கட்டில்களை தயார் செய்யவும் நடவடிக்கை

கொழும்பு, மே 10

இலங்கையில் நாளாந்தம் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், புதிதாக 06 வைத்தியசாலைகளை ஸ்தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கொரோனா அவசர சிகிச்சை மற்றும் சுகாதாரக் கட்டமைப்புக்காக முன்னாயத்த செயற்றிட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

கொரோனா நோயாளர்களுக்காக 60 ஆயிரம் கட்டில்களைத் தயார் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

நாட்டிலுள்ள 32 வைத்தியசாலைகளை கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றும் செயற்றிட்டம் எதிர்வரும் இரண்டு வாரங்களில் நிறைவு பெறும் எனவும் மருத்துவர் ஜயசுந்தர பண்டார சுட்டிக்காட்டினார். (இ

## மேலும் 1,365 பேர் பூரண குணமடைவு

கொழும்பு, மே 10

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 1,365 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 463 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றுப் பிற்பகல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# அதிவேக வீதியில் எத்தனோல் மீட்பு!

கொழும்பு, மே 10

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி எத்தனோல் கடத்திச் சென்ற நபர் ஒருவர் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கசாகல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்குணுகொலபெலஸ்ஸ நுழைவில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு பிரவேசித்த லொறி ஒன்று தொடர்பில் சந்தேகித்த அதிவேக நெடுஞ்சாலை பொலிஸ் அதிகாரிகள் லொறியைப் பின் தொடர்ந்து சென்றுள்ளனர்.

இதன்போது, கசாகல பிரதேசத்தில் லொறியை நிறுத்திச் சோதனை செய்தபோது அதில் இருந்து 25 லீற்றர் கொள்ளளவு கொண்ட 5 ஆயிரம் லீற்றர் எத்தனோல் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

குறித்த எத்தனோல் போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி கடத்திச் செல்லப்பட்டுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது, களனி, தொரண சந்திப் பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் எத்தனோல் தொகை மேலதிக விசாரணைகளுக்காக வீரவில பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (இ)

# பொலிஸாரும் இராணுவமும் கூட்டிணைந்து மக்கள் மத்தியில் கொரோனா விழிப்புணர்வு

கொழும்பு, மே 10

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து தொடர்ந்தும் பல்வேறு மக்கள் நல வேலைத் திட்டங்களை பூராகவும் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தில் பொலிஸாரும், இராணுவமும் இணைந்து மக்கள் மத்தியில் கொரோனா நோய் தொடர்பான விசேட விழிப்பூட்டல் நடவடிக்கையை நேற்று மேற்கொண்டனர்.

வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.எஸ். ஜயசுந்தர தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்பூட்டும் நடவடிக்கையில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி சீ.ஐ.சந்திரகுமார மற்றும் சித்தாண்டி இராணுவப் படைப் பிரிவினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு துண்டுப் பிரசுரங்கள் வழங்கி மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினர்.

இதன்போது நூற்றுக்கணக்கான வாகனங்கள் சோதனை செய்யப்பட்டதுடன், முகக்கவசத்தை முறையாக அணியாத பலருக்கு பொலிஸாரால் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (இ)

ஈழநாடு



# ‘மோதி’ என்கிற பிம்பத்தின் மீது இடியாக இறங்கியிருக்கும் கொவிட் சிக்கல்

“ஊரடங்கிலிருந்து கொவிட் ஊழிக்காலத்துக்கு இந்தியாவை தலைமையேற்று அழைத்துச் சென்றிருக்கிறார் நரேந்திர மோதி” - என்று விமர்சித்தது இங்கிலாந்தைச் சேர்ந்த சண்டே டைம்ஸ் பத்திரிக்கையின் தலைப்புச் செய்தி.

இந்த செய்தியை மறுபிரசுரம் செய்த ஆஸ்திரேலிய நாளிதழ் ஒன்று, கடுமையாக எழுதப்பட்ட ஒரு சுருக்கத்தையும் சேர்த்துள்ளது : “மூர்க்கத்தனம், அதீத தேசியவாதம், திறமையற்ற அதிகாரத்துவம் எல்லாம் சேர்ந்து இமாலயப் பிரச்னையை உருவாக்கியிருக்கின்றன. இந்தியர்கள் மூச்சுத் திணறும் போது, கூட்டங்களைப் பெரிதும் விரும்புகிற இந்தியப் பிரதமர் குளிர்காய்கிறார் என்கிறார்கள் விமர்சகர்கள்”.

இந்தியாவிடமிருந்து இதற்கு ஒரு எதிர்வினை கிளம்பியது என்றபோதும், போற்றிப் பாதுகாக்கப்பட்ட பிரதமர் நரேந்திர மோதியின் பிம்பம் பெரிதாக மோசமடைந்துள்ளது என்பதை மறுக்கவே முடியாது.

இந்தியாவையே தண்டித்துக்கொண்டிருக்கிற கொரோனா இரண்டாம் அலை பற்றிய செய்திகளும் விவரங்களும் சர்வதேச ஊடகங்கள், சமூக வலைத்தளங்களில் பரவலாகியிருக்கின்றன - அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறவும் படுக்கைகளுக்காகவும் காத்திருந்தபடியே மூச்சுத்திணறும் மக்கள், ஆக்சிஜன் சிலிண்டர்கள் தொடங்கி மருத்துவரிடம் பேசுவதற்கான வாய்ப்பு உள்ளிட்ட எல்லாவற்றுக்காகவும் குடும்ப உறுப்பினர்கள் அலைந்து திரியவேண்டிய கையறு நிலை, கொத்துக்கொத்தாக நடக்கும் பிண எரிப்புகள், இறந்தவர்களை எரிப்பதற்குப் போதுமான இடம் இல்லாததால் இடுகாடுகளாக மாறிய வாகன நிறுத்தத் தளங்கள்.

உலகெங்கிலும் இந்த செய்தியைப் பின்பற்றிவரும் பல ஊடகங்கள் இதற்குக் காரணமாக நரேந்திர மோதியை சுட்டிக் காட்டுகின்றன. நுணுக்கமான விஷயங்களைக் கூட கவனிக்கும் திறமையான நிர்வாகியாகத் தன்னை முன்னிறுத்திக் கொள்ளும் அவர், இந்தியாவில் தொற்று எண்ணிக்கை தினமும் புதிய உச்சத்தை எட்டிக்கொண்டிருப்பதால் பெரிதும் தடுமாறிக் கொண்டிருக்கிறார்..

“செயல்திறன்மிக்க ஒரு தலைவர் மோதி என்று கூறப்பட்டது ஆனால் தற்போது அந்த செயல்திறன் மீது மக்கள் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றனர்” என்கிறார் அரசியல் விஞ்ஞானி மிலன் வைஷ்ணவ். “அரசு தடுமாறுகிறது என்பதோ, அது சம்பவ இடங்களில் இல்லவே இல்லை என்பதோ மட்டும் பிரச்னை யல்ல. இந்த சூழலின் தீவிரத்தை அதிகப் படுத்தியதே அரசுதானே” என்கிறார்.

கோவிட் எதிர்வினையில் தவறு செய்த ஒரே தலைவர் மோதி என்று சொல்லிவிட முடியாது. ஆனால் அவரது வீழ்ச்சி அபிரிமிதமானது என்கிறார் வைஷ்ணவ். “முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பிரேசில் அதிபர் போல் சினாரோ ஆகியோரோடு ஒப்பிட்டால், மோதி கோவிட் மறுப்பாளர் அல்ல. ஆனாலும் தொடர்ந்து எச்சரிக்கைகள் வந்தபோதிலும் அவர் இப்போதைய பிரச்னையைத் தடுக்கவில்லை” என்கிறார்.

தொடர்ந்து பல வாரங்களுக்கு கங்கைக்கரையில் நடத்தப்பட்ட புனித நீராடல் விழாவை அவர் அனுமதித்தார். மேற்கு வங்கத் தேர்தல் ஒரு மாதம் வரை நீளவேண்டும் என்று வலியுறுத்தினார். பிரம்மாண்டக் கூட்டங்களில் முகக்கவசமின்றிப் பங்கெடுத்த அவர், இத்தனை பெரிய கூட்டமா என்று அதிசயித்தும் இருக்கிறார்.

“ஊரடங்கை அனுபவித்த உலகம் இப்படிப்பட்ட அலட்சியங்களையும் அத்துமீறல்களையும் கண்டு அதிர்ச்சியடைந்தது” என்கிறார் எகனாமிஸ்டின் இந்திய செய்தியாளர் அலெக்ஸ் ட்ரெவேலி,

2002ல் கிட்டத்தட்ட 1000 பேர், பெரும்பாலும் இஸ்லாமியர்கள் குஜராத் கலவரத்தில் இறந்தார்கள். அறுபது இந்துக்கள் ரயில் தீவிபத்தில் இறந்த பின்பு இந்தக் கலவரம் வெடித்தது. இந்தக் கலவரத்தை அனுமதித்ததாக அப்போதைய குஜராத் முதல்வர் மோதி மீது குற்றம் சாட்டப்பட்டது. தவறு செய்யவில்லை என்று மறுத்தவர், சிக்கலின்றி அந்தக் குற்றச்சாட்டிலிருந்து வெளியில் வந்தார்.

2012ல், “நல்ல நிர்வாகம், செயல்திறன் மிக்க ஆட்சி ஆகியவற்றுக்கான உதாரணம்” என்று அவரது ஆதரவாளர்கள் அவரைப் புகழ்ந்தார்கள். மற்றவர்களோ, “எதேச்சதிகாரம் மிக்க தனி நபர்” என்றும் “மோசமான பிரதிநிதி” என்றும் வர்ணித்தனர். ஆனாலும் அவரது வருகை புதியதாக இருந்ததால் குஜராத் மலர்ந்து வணிகம் செழித்தது என்றும் எழுதினர்.

குஜராத்தை 13 ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு அவர் பிரதமராக முன்னிறுத்தப்பட்டார். இந்தியாவின் பொருளாதாரத்தை அவர் மறு சீரமைப்பு செய்வதற்கான வாய்ப்பு இது என்று சொல்லப்பட்டது. மோதி என்கிற மனிதரை இவ்வாறு முன்னிறுத்துவது அப்போதைய பா.ஜ.கவிற்குக் கொஞ்சம் ஆபத்துதான் என்றபோதும், சமரசங்களற்ற ஒரு நிர்வாகி என்ற அவரது பிம்பம் அவருக்கு வலு சேர்த்தது.

“குஜராத்தை எளிதில் இவர் நிர்வகித்தார் என்பதைப் பார்த்து நாம் விழுந்துவிட்டோம்” என்கிறார் மோதியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவரும் பத்திரிக்கையாளருமான நிலஞ்சன் முகோபாத்யாய.

நரேந்திர மோதியுடைய கவசத்தில் உள்ள ஓட்டைகளை இந்தப் பிரச்னை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது என்கிறார்கள் விமர்சகர்கள். மத்தியிலிருந்து ஆட்சி செய்யும் அவரது பாணி சென்ற வருடம் நம்பிக்கையளித்தது.

ஆனால் இப்போதோ அவர் மாநிலங்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டார். அவரது ஆட்சிமுறையே ஓட்டையானதாகத் தெரிகிறது. மற்ற நாடுகளுக்கு அவர் தடுப்பூசிகளை தானம் செய்தது பெரிய விஷயமாக இருந்தது. இப்போதோ அது அலட்சியமாகத் தெரிகிறது. இந்தியாவின் மிகப்பெரிய தடுப்பூசி தயாரிப்பாளர்கள், மற்ற நாடுகளுக்குத் தருவோம் என்ற ஒரு வாக்குறுதியோடுதான் சர்வதேச நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றார்கள். ஆனால் இப்போதோ அந்த வாக்குறுதிகளை மறுக்குமாறு அரசே அழுத்தம் கொடுக்கிறது.எந்த பேரினவாதத்தை முன்பு வாக்காளர்கள் வியந்து பேசினார்களோ, அதே மனப்பான்மை கட்சிகளுக்கு அப்பாற்பட்டு அவர் முடிவெடுப்பதைத் தடுக்கிறது என்கிறார்கள் வல்லுநர்கள்.

“தன் பெயரை அவர் எல்லா இடங்களிலும் முத்திரை போல பதித்துக் கொண்டார். இந்த சூழலில் ஒரு தோல்வி ஏற்படும்போது அதற்கும் அவர்தான் பொறுப்பு” என்கிறார் அகர்வால்.

வெளிநாடுகளிலும் ஒரு வியக்கத்தக்க பிராண்டை அவர் கட்டமைத்தார். “இந்தியாவுக்கு வெளியில் இருக்கும் போதுதான் அவர் மிகச்சிறப்பாக வெளிப்படுகிறார்” என்று எழுதியது ஒரு நாளிதழ். மேடிசன் சதுக்கத்தில் ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தை அவர் ஈர்த்தார். டெக்ஸாசில் நடந்த ஹௌடி மோதி நிகழ்வில் டிரம்ப்பையும் மீறி அவர் ஜொலித்தார்.

“தன்னைப் பற்றிய பிம்பத்தை அவர் மூர்க்கமாக முன்வைத்தார்” என்கிறார் அகர்வால். “தன்னை அதிகம் வெளிப்படுத்திக்கொண்ட இந்தியத் தலைவர்” என்றுகூட அவருக்குப் பெயர் கிடைத்தது.

அவரது தேசியவாதம் இந்தியர்களுக்கும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கும் ஒரு களிம்பாகவே அமைந்தது. இந்தியா வல்லரசாக மாறும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது. “இப்போதோ தாய்லாந்து, வியட்நாம்,வங்கதேசம் உள்ளிட்ட சமநிலைப் பொருளாதார நாடுகள் இந்தியாவை விட நன்றாகவே கோவிட்டை எதிர்கொள்கின்றன என்பது அவர்களுக்கு அதிர்ச்சியளிக்கிறது. வளர்ந்துவருகிற ஒரு வல்லரசு என்று இவர்கள் இந்தியாவைப் பற்றித் தங்கள் நண்பர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதுவோ உள்ளது உள்ளபடி தன்னை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது. இது வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு அவமானமாக இருக்கிறது” என்கிறார் அகர்வால்.

“எத்தனை நடந்தாலும் மீண்டு வருகிற ஒரு அரசியல்வாதி அவர்” என்கிறார் வைஷ்ணவ். “மிக மோசமான வீழ்ச்சிகளிலிருந்து அவர் வெளியில் வந்திருக்கிறார். அவரை அவ்வளவு சீக்கிரம் உதாசீனப்படுத்திவிடமுடியாது” என்கிறார் ட்ரவேலி.

இதை சரிசெய்யும் முயற்சியில் இப்போதே அரசு இறங்கிவிட்டது. மோசமான பத்திரிக்கை செய்திகள் தங்களைக் காயப்படுத்துகிறது என்று தெரிவித்திருக்கிறது. எதிர்கட்சித் தலைவர்களோடு சண்டையிட்டிருக்கிறது. விமர்சிக்கும் சமூக வலைதளப் பயனாளிகள்மீது கோபத்தில் இருக்கிறது. இந்தியாவை இழிவுபடுத்தும் வெளிநாட்டு சதி இது என்று அரசு தெரிவித்திருக்கிறது. தனக்குப் பிடிக்காத ட்வீட்களை அழிக்குமாறு ட்விட்டரைக் கேட்டுக்கொண்ட அரசு, மோதியின் தலைமைக்கு நன்றி சொல்லி ட்வீட் செய்திருக்கிறது.

ஆனால், ஏப்ரல் 20ம் தேதி வந்த ஒரு சிறு உரை தவிர, மோதியின் தலை எங்கும் தட்டுப்படவேயில்லை.


“கொள்ளைநோய் தொடங்கியபோது, இந்தியாவிலும் சர்வதேச அரங்கிலும் தான் எப்படித் தெரியவேண்டும் என்று அவருக்குத் தெரிந்திருந்தது. நாட்டை வழிநடத்தும் ஒரு தளபதியாகவே தன்னை முன்னிறுத்தினார். ஆனால் இப்போதோ அவரிடம் முன்வைப்பதற் கான பிம்பம் எதுவும் இல்லை. மன்னிப்புக் கேட்கவோ உதவி கேட்கவோ அவருக்கு ஆர்வமும் இல்லை” என்கிறார் அகர்வால்.

பிரதமராக ஆனபிறகு சொற்பமான பேட்டிகளையே அவர் தந்திருக்கிறார். கோவிட் காலம் உட்பட எப்போதுமே அவர் பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தியதில்லை. “அவர் கேள்விகளை விரும்புவதில்லை” என்கிறார் முகோபாத்யாய.

ஆனால் பாதிக்கப்பட்ட மத்தியவர்க்கம், மருத்துவ வசதியில் இருக்கும் ஓட்டைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் பணக்கார வர்க்கம் என்று எல்லாருக்குமே கேள்விகள் இருக்கின்றன. சொல்லப்போனால் தங்கள் பிரதமர், சூழல் இத்தனை மோசமாகும்வரை எப்படி விட்டு வைத்தார் என்று கட்சி விசுவாசிகளுக்கே கேள்வி இருக்கிறது. - பி.பி.சி.

> “செயல்திறன் மிக்க ஒரு தலைவர் மோதி என்று கூறப்பட்டது ஆனால் தற்போது அந்த செயல்திறன் மீது மக்கள் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றனர்” என்கிறார் அரசியல் விஞ்ஞானி மிலன் வைஷ்ணவ். “அரசு தடுமாறுகிறது என்பதோ, அது சம்பவ இடங்களில் இல்லவே இல்லை என்பதோ மட்டும் பிரச்னையல்ல. இந்த சூழலின் தீவிரத்தை அதிகப்படுத்தி யதே அரசு தானே” என்கிறார் அவர்.





# புதிய கொவிட் விகார மாற்றமும் அதிக ஆபத்தான சந்தர்ப்பங்களும்

வைரஸ் தொற்று நோய்களின் ஒரு சிறப்பு அம்சம் யாதெனில், காலத்திற்குக்காலம் அதன் தோற்றத்தில் ஏற்படும் மாற்றம் ஆகும். வைரசின் ஒரு புரதத்தில் ஏற்படும் மாற்றம் கூட அதன் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும். இம்மாற்றத்தினால் வைரஸ் பரவும் வேகம் துரிதப்படுத்தப் படக் கூடும். அத்துடன் இது வைரஸ் தொற்றுநோயால் ஏற்படும் நோயின் தீவிரத்தையும் அதிகரிக்கவும் கூடும்.

தற்போது இலங்கையில் காணப்படும் COVID19 வைரஸ்களில் B.1.1.7 உட்பட பல்வேறு வகையான புதிய விகாரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதனால், தொற்று வழக்கத்தை விட வேகமாக பரவவும் மட்டுமன்றி கடுமையான நோய் அறிகுறிகளையும் ஏற்படுத்தவும் கூடும்.

உலகெங்கிலும் சில காலமாக நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, கொவிட் வைரஸ், குறித்த இடத்தில் விரைவாக பரவுவதற்கு மூன்று முக்கிய காரணிகள் உள்ளன. புதிய கோவிட் வகைகளுக்கும் இக்காரணி பொதுவானவை.

வைரசின் மாற்ற வகைகள் எவ்வாறிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், உங்களைப் பாதுகாத்துக் கொள்ள நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவ்வாபத்துக் காரணிகளைக் கொண்ட இடங்களைக் கண்டறிந்து அவற்றைத் தவிர்ப்பதேயாகும்.

இந்த கொவிட் அபாயத்தை அதிகரிக்கும் காரணிகள் யாவை?

1. **கூட்டம் அதிகமாக சேரும் இடமாயிருத்தல் -** எவ்விடத்தில் சனநெரிசல் அதிகரிக்கின்றதோ அவ்விடத்தில், கொவிட் தொற்றாளர் இருக்கக் கூடிய வாய்ப்பு அதிகரிக்கிறது, இதனால் கொவிட் தொற்று ஏற்படும் அபாயமும் அதிகரிக்கிறது.
2. **மக்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பங்கள் -** குறிப்பாக ஒருவருக்கொருவர் அருகருகே நெருக்கமாக இருக்கும்போது, கதைக்கும் போது, உண்ணும் போது, பருகும்போது.
3. **போதிய காற்றோட்டமற்ற மூடப்பட்ட இடத்தில் இருப்பது -** மூடப்பட்ட இடங்களில் கொவிட் வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பு விகிதம் வெளிப்புற காற்றோட்டமான இடங்களை விட அதிகம் என்பது தெளிவு. இது தொடர்ந்தேட்சியாக கதைக்கப்படவில்லை எனினும், இது கொவிட் பரவலில் செல்வாக்கான மற்றொரு மிக முக்கியமான பிரபலமான காரணியாகும்.

இந்த மூன்று காரணிகளில் ஒன்றாவது நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தால் அங்கு, வேறு எங்கும் இல்லாததை விட கொவிட் தொற்று உருவாகும் அதிக வாய்ப்புள்ளது.

இந்த காரணிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவை ஒரு இடத்தில் காணப்படின், அத்தகைய இடங்களில் கொவிட் பரவுவது இன்னும் விரைவாக நிகழும்.

எனவே, இதுபோன்ற இடங்களை முடிந்தவரை தவிர்க்க வேண்டியது அவசியம். சில அவசர காரணங்களுக்காக நீங்கள் அத்தகைய இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தால், அங்கு செலவழிக்கும் நேரத்தைக் குறைப்பதன் மூலம் ஆபத்தை ஓரளவிற்கு குறைக்கலாம். குறிப்பாக இது போன்ற அதிக ஆபத்து நிலவும் காலங்களில், இக்காரணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை இருக்கும் இடங்களை இயலுமானவரை தவிர்ப்பது அவசியமாகும்.

அவ்வாறே, உங்கள் கைகளை சுத்தமாக வைத்திருப்பது மற்றும் முகக் கவசங்களை தவறாமல் அணிவது கொவிட் பரவும் அபாயத்தை வெகுவாகக் குறைக்கும். இருப்பினும், இச் செயல்பாடுகள் மேலே உள்ள காரணிகளுள்ள இடங்களில் அதிக நேரத்திற்கு தரித்து இருந்தால் தொற்றின் அபாயத்தை முற்றிலுமாக இல்லாமற் செய்யாது.

நாடு முழுவதும் கொவிற் நோய் வேகமாக பரவி வரும் இந்த நேரத்தில், உங்களினதும் உங்கள் அன்புக்கு உரியோரினதும் பாதுகாப்பைக் கருதி மேற்கண்ட ஆபத்துக் காரணிகளைக் கொண்ட இடங்களை முடிந்தவரை தவிர்க்க மறக்காதீர்கள். மேலும், உங்கள் அன்புக் குரியவர்களின் பாதுகாப்புக் கருதி ஆபத்துக் காரணிகளைப் பற்றிய அறிவை முடிந்தவரை பகிர்ந்து கொள்ளுங்கள். ■

# கொவிட் பரவும் இக்காலத்தில் கர்ப்பிணிகள் மிக அவதானமாக செயற்பட வேண்டியது ஏன்?



கர்ப்பிணியான நீங்களும், கருவிலுள்ள உங்கள் சிசுவும் ஆரோக்கியமாக இருப்பது மிக அவசியம். இதற்காக கொவிட் தொற்று பரவும் இக்காலத்தில் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை உறுதியாக கடைப்பிடிப்பதும், உரிய சுகாதார ஆலோசனைகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

கர்ப்பிணித் தாய்க்கு கொவிட் தொற்று ஏற்பட்டால் சிக்கல்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால், அத்தியாவசிய காரணங்களை தவிர வேறு எச்சந்தர்ப்பத்திலும் எதற்காகவும் வீட்டை விட்டு வெளியேறாதீர்கள்.

கிளினிக் அல்லது வைத்தியசாலைக்கு செல்ல நேர்ந்தால், கொவிட்19 நோயிலிருந்து தவிர்ப்பதற்காக கீழ்வரும் ஆலோசனைகளை உறுதியாக கடைப்பிடியுங்கள்.

1. காற்றோட்டமற்ற இடத்தில் தரித்திருப்பதை இயன்றளவு தவிர்த்தல்.
2. எப்பொழுதும் உரியவாறு முகக் கவசத்தை அணிதல்.
3. நபர்களுக்கிடையான தூரத்தை உரியவாறு பேணல்.
4. மரண உற்சவம் போன்ற சன நெரிசல் மிக்க இடங்களுக்கு செல்லாதிருத்தல்.
5. எப்போதும் சவர்க்காரம் இட்டு இரு கைகளையும் கழுவி சுத்தமாக வைத்திருத்தல்.

கொவிட் நோய்ப் பயத்தின் காரணமாக கர்ப்பிணித் தாய்மார் உரியவேளைகளில் கிளினிக்கிற்கு செல்வதிலும் மற்றும் சிகிச்சைகளைப் பெறுவதிலும், தாமதமாவது காணக் கிடைக்கின்றது. இத் தாமதத்தின் காரணமாக கர்ப்பிணித் தாயினதும் கருவிலுள்ள சிசுவினதும் ஆரோக்கியத்திற்கு இடையூறு ஏற்படலாம்.

கொவிட் ஆபத்து அதிகரிக்கும் காலத்தில் வழமையான சுகாதார சேவைகளை வழங்கப்படுவதற்கு இயலாத நிலைமை இருக்க முடியும். ஆதலால், உங்களுடைய சுகாதார வைத்திய அதிகாரி அவர்களை அல்லது குடும்ப நல சுகாதார உத்தியோகத்தரை தொடர்புகொண்டு, மேற்குறித்த சேவைகளை தற்போது பெறக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் இன்றே அறிந்து கொள்ளுங்கள்.

“கர்ப்ப காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்தான சமிக்கைகள்” தொடர்பில் நீங்கள் இப்போதே அறிந்திருக்கக் கூடும். மீண்டுமொருமுறை அவற்றை ஞாபகப்படுத்துவதென்றால், காய்ச்சல், குருதிப்பெருக்கு, கடுமையான தலையிடி, மூச்செடுப்பதில் கஷ்டம், பார்வைக் குறைவு, வலிப்பு, நெஞ்சில்/வயிற்றில் வேதனை, சிசுவின் துடிப்புக் குறைவு, உடல் வீக்கம், அத்துடன் வேறு ஏதாவது கடினமான அசௌகரிக நிலை ஆபத்து சமிக்கைகளாக அடையாளம் காணப்பட முடியும்.

இவ்வாறான ஆபத்தான சமிக்கை தோன்றினால் உடன் வைத்தியசாலைக்கு செல்வது கட்டாயமாகும். அது தொடர்பில் உங்களுடைய குடும்ப நல சுகாதார உத்தியோகத்தருக்கு அறிவியுங்கள்.

கர்ப்பிணியான உங்களுடைய பாதுகாப்பு தொடர்பாக, கொவிட் நோய்த் தொற்றிலிருந்து உங்களை தவிப்பதற்குரிய உரிய சகல ஏற்பாடுகளும் வைத்தியசாலையில் செய்யப்பட்டுள்ளது. ஆதலால் அவசிய வைத்திய சிகிச்சை பெற்றுக் கொள்ள ஒருபோதும் தயங்கவேண்டாம்.

உங்களுடைய குடும்ப அங்கத்தவர் ஒருவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் அல்லது கொவிட் நோயாளி என சந்தேகிக்கப்படும் நபரொருவர் உங்கள் வீட்டில் வசித்தால் அது தொடர்பாக உடனடியாக உங்களுடைய குடும்ப நல சுகாதார உத்தியோகத்தருக்கு அறிவியுங்கள். உங்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முடிந்தவரை அவரிலிருந்து விலகி இருங்கள்.

தற்செயலாக, உங்களுக்கு ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் கொரோணா நோய் அறிகுறி உள்ளதாக சந்தேகித்தால் உடனடியாக உங்கள குடும்ப நல சுகாதார உத்தியோகத்தருக்கு அறிவியுங்கள்.

அவசிய சிகிச்சைகளை உடனடியாகப் பெறுங்கள். வைத்தியசாலைக் கட்டமைப்பு உங்களுக்காக தயார் நிலையில்......

இச்சகல நிகழ்வுகளுக்கிடையே உங்களுக்கு ஏதாவது மன உளைச்சல் தோன்ற முடியும். அதை தவிர்ப்பதற்காக, மனதை எப்போதும் நிதானமாகவும் தெளிவாகவும் வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.

தேவைப்படும் எந்தநேரத்திலும் உங்களுடைய குடும்ப நல சுகாதார உத்தியோகத்தரை அல்லது 1999 சுவசெரிய தொலைபேசி சேவையினூடாக வைத்தியரொருவரை தொடர்பு கொண்டு உங்களுடைய பிரச்சனை தொடர்பான காரணங்களை கலந்தாலோசிக்கவும் முடியும்.

இத்தகவல்களை இலங்கையிலுள்ள சகல தாய்மாரினதும் மற்றும் எதிர்கால சிறுவர் பரம்பரையினரினதும் நல்வாழ்விற்காக பகிருமாறு நாம் உங்கள் சகலரையும் வேண்டுகிறோம். ■

- Health Promotion Bureau

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 2
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - எஸ்.மயூரன்

**04.** கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. அவசரக்குடுக்கை எனும் மரபுத்தொடரின் கருத்து .................................................. (சுறுசுறுப்பானவன் / பதற்றக்காரன்)
2. இருபத்தைந்தாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா .................................................. (வெள்ளிவிழா/ பொன்விழா)
3. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை .................................................. (முகவுரை / அணிந்துரை)

**05)** கீழே தரப்பட்டுள்ள பாடலின் வெற்றிடத்தை நிரப்புக.

கூழை யேநீ குடித்தாலும்,
குளித்த பிறகு குடியப்பா!
..................................................................................................
இரவில் நன்றாய் உறங்கப்பா!

**06)** கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்.

நாங்கள் பயிரைச் செய்வதற்கு முன்பு எதனைப் பார்க்க வேண்டும்? ..................................................

**07.** வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

1. தாகம் - நீர் போல நோய் .................................................. (வைத்தியர் / மருந்து)
2. தென்னை பிள்ளை போல மூங்கில் .................................................. (கன்று / நாற்று)

**08.** பின்வரும் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

1. இலங்கையில் தேயிலைச் செடியை முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள்
..................................................................................................
2. உணவு பழுதடைவதற்கு காரணமான பக்றீரியாவைக் கண்டு பிடித்தவர்
..................................................................................................

**09.** பின்வரும் வாக்கியங்களில் சரியான நிறுத்தற்குறிகளை எழுதுக.

1. மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்.
2. ஐயோ எனக்கு வலிக்கிறது


**10.** தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களை நிரப்புக.

**இடமிருந்து வலம்**

1. நாம் பிறருக்குச் செய்யும் நன்றி
3. புறம் என்பதன் எதிர்ச்சொல்

**மேலிருந்து கீழ்**

2. மிக விலை கூடிய உலோகம்




**11)** கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

1. You .................................................. (od / have ) done well
2. What .................................................. (are / do) you like.

**12)** கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1. I will bring flowers ..................................................................................................
2. This is my Pencil ..................................................................................................

**13)** கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி, ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

நான் நாளைக்கு பாடசாலைக்கு வருவேன்..................................................................................................

**14)** கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

சுப உதேசனக் வேவா ..................................................................................................

**15)** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

அண்ணா பால் குடியுங்கள் ..................................................................................................

**16)** அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் பாடநூல்களை எதிர்காலத்தில் தம்பி, தங்கைகளும் படிப்பதற்கு பேணிப் பாதுகாக்க வேண்டும். இது எமது கடமையாகும். **"இலவசப் பாடநூலை பேணி பாதுகாப்பதற்கு நீர் எடுக்கும் நடவடிக்கைகள்"** பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுங்கள். (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

1. ..................................................................................................
..................................................................................................
2. ..................................................................................................
..................................................................................................
3. ..................................................................................................
..................................................................................................

**17)** தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.

**19813** அடைப்பினுள் தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக.
..................................................................................................


**18)** அடுத்து வரும் எண்களைத் தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் எழுதுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 13 | 15 | 17 | 19 | 21 | 23 | ...... | ...... |

**19)** அட்டவணையிலுள்ள வெற்றிடத்தை நிரப்புக.

| திண்மம் | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை | விளிம்பு |
|---|---|---|---|
| நான்முகி | | | |
| கூம்பகம் | | | |

**20)** உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக. ..................................................



# இந்தியப் பிரஜைகளின் சட்டவிரோத நுழைவு இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து

## அரசை எச்சரிக்கின்றது சஜித் அணி

**கொழும்பு, மே 10.**

**இந்தியாவிலிருந்து ஏராளமானோர் சட்டவிரோதமாக அண்மைய நாட்களில் இலங்கைக்கு நுழைந்துள்ளனர் என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.**

இது இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“மன்னார், புத்தளம் மற்றும் கொச்சிக்கடை ஆகிய கடல் பரப்பிலிருந்து படகுகள் மூலம் நாட்டுக்குள் நுழைந்த நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் குறித்த பிரதேச வாசிகள் அறிவித்த பின்னரே அதிகாரிகள் இந்த விவகாரம் தொடர்பில் அறிந்திருக்கின்றார்கள்.

குறித்த தகவல் மக்களால் வழங்கப்பட்டபோதிலும், சட்டவிரோதமாக நுழைந்தவர்களைப் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தவோ, அவர்களை தனிமைப்படுத்தவோ அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டனர்.



கொரோனா தொடர்பான அனைத்து இறப்புகளுக்கும் தற்போதைய அரசு பொறுப்பேற்க வேண்டும். கொரோனா வைரஸ் தொடர்பாக தகுந்த முடிவுகளை எடுக்கத் தவறிய அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்” - என்றார். (இ)

### ஏப்ரலில் வந்தவர்களில் இந்தியர்களே முதலிடம்

கொழும்பு, மே 10

ஏப்ரல் மாதம் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்த 4 ஆயிரத்து 168 பேரில் பெரும்பான்மையானவர்கள் இந்தியர்கள் என்று சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், மே மாதத்தில் மொத்தமாக இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளில் 19 வீதமானவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது..

சீனா, கஜகஸ்தான், ஜேர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை முறையே 475, 440, 383 மற்றும் 334 ஆக இருந்தது என்றும் சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது. (இ)

### இடப்பற்றாக்குறையால் தொற்றாளர்கள் இருதய தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

#### மருத்துவர் கோட்டாபய ரணசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மே 10.

இலங்கையில் கொரோனா வைரஸ்நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க தீவிர சிகிச்சை பிரிவுகளில் பற்றாக்குறை நிலவுகின்றது எனக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் நிபுணர் மருத்துவர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இருதய நோயாளிகளுக்கு தீவிர சிகிச்சை படுக்கைகள் உள்ளன. ஆனால், நாங்கள் தற்போது கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக அவர்களை இடம் மாற்றப் போகின்றோம்” என்றார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் பிரதீப் டி சில்வா, “கொரோனா நோயாளிகளுக்கு மாத்திரம் பிரத்தியேகமான தீவிர சிகிச்சை படுக்கைகள் உள்ளதா என்பது தற்போது கேள்விக்குறியாகவே உள்ளது” என்றார். (இ)

### கொரோனாவால் 9 மாகாணங்களுக்கும் ஒன்பது பிரதி சுகாதாரப் பணிப்பாளர்கள்

#### நியமித்தார் அமைச்சர் பவித்ரா

கொழும்பு, மே 10.

நாட்டில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளை மாகாண மட்டத்தில் முன்னெடுப்பதற்காகப் பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகங்கள் 9 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள ளது.



அனைத்து மாகாணங்களும் சென்று கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்து தேவையான வசதிகளை வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரையில் நாடளாவிய ரீதியில் 105 கொரோனாத் தடுப்பு நிலையங்களில் 19 ஆயிரத்துக்கும் அதிகமான கட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (இ)



## கொரோனாத் தடுப்பூசி வழங்கல் நடவடிக்கையைத் துரிதப்படுத்துக

### - அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, மே 10.

கொரோனாத் தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்குதல் மற்றும் நாட்டுக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரநாத் தடுப்பு குழுவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“குறுகிய காலத்தில் முடியுமானளவு தடுப்பூசிகளைக் நாட்டுக்குக் கொண்டு வரவும், அவற்றை மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சீனாவிலிருந்து கிடைக்கப்பெற்ற 6 இலட்சம் சைனோபாம் தடுப்பூசிகள் சுகாதார அமைச்சிடம் உள்ளன.

இந்த தடுப்பூசி 51 நாடுகளில் 55 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு வெற்றிகரமாக வழங்கப்பட்டுள்ளன. அந்த நாடுகளின் சுகாதார அதி காரிகளுடன் கலந்துரையாடி அந்தத் தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக்கொடுப்பதற்கு உள்ள வாய்ப்புகளைக் கண்டறி யுங்கள்” - என்றார்.

முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு ‘அஸ்ட்ரா செனிக்கா’ தடுப்பூசியின் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தத் தடுப்பூசிகள் மேலதிகமாக உள்ள நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்வதற்குத் தேவையான கலந்துரையாடல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என இதன்போது அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களைத் தனிமைப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகளை விதித்தல் மூலம் நோய் பரவுவதைத் தடுப்பதற்கு அதிகபட்சமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (இ)

## அபிவிருத்திக்குத் தேவையான தரவை புதுப்பிக்கும் முயற்சியில் உலக வங்கி

கொழும்பு, மே 10.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை உலக வங்கி ஆரம்பித்துள்ளது.

இலங்கைக்கு மிகவும் அவசியமான அபிவிருத்தி வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் தொடர்பாக தம்மிடம் உள்ள தரவுகளைப் புதுப்பிப்பதே இவ்வாறு தகவல் சேகரிப்பதன் எதிர்பார்ப்பாகும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் வறுமை ஒழிப்புக்காக இவ்வாறான அறிக்கையிடல்களை மேற்கொள்வதாகவும், பொதுமக்கள் தகவல்களை வழங்கி பங்களிக்க வேண்டும் என்றும் உலக வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்காக அரச மற்றும் தனியார் துறையினர் பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த பிரஜைகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரிடம் இருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்று உலக வங்கியின் மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பாரிஸ் ஹதத் சர்வோஸ் தெரிவித்துள்ளார். இதுவரை உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் இலங்கையில் 19 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும், அதற்காக 2.33 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# தீவிரவாதம், ஒழுங்கு மீறல்களில் ஈடுபட்டால் அகதி உரிமை பறிப்பு

வெளிநாட்டவருக்கு பிரான்ஸ் எச்சரிக்கை



பாரிஸ், மே 10

தீவிரவாதச் செயல்கள், பொது ஒழுங்கிற்கு ஊறு விளைவித்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்ற வெளிநாட்டவர்களது புகலிடப் பாதுகாப்பு பறிக்கப்பட்டு அத்தகையோர் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள்.

பிரான்ஸின் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டாமனா இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

வெளிநாட்டு அகதிகளைப் பொறுத் தவரை " அவர்கள் யார் என்று பார்க்காமல் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்ப தைப் பொறுத்தே தீர்ப்பளிக்கப்படும். பிரான்ஸின் தெளிவான கொள்கை நிலைப்பாடு இதுவே ஆகும்" என்றும் அவர் நினைவூட்டி உள்ளார். அமைச்சரின் இந்தக் கருத்துக்களை 'Le Figaro' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் வெளிநாட்ட வர்களது தஞ்சப் பாதுகாப்பை (asylum protections) மீளப்பெறுகின்ற 147 முடிவு கள் எடுக்கப்பட்டுள்ளன. முறைகேடான வகையில் உள்ள ஆயிரத்து 83 வெளிநாட்டவர்கள் எச்சரிக்கைக் கோவைகளில் (file of alerts) சேர்க்கப்பட்டுள்ளனர். அவர் களில் 587 பேர் நாட்டில் இருந்து வெளி யேற்றப்பட்டுள்ளனர். கடந்த ஆறு மாதங்களில் ஆகக் கூடிய எண்ணிக் கையாக 200 பேரது வதிவிட உரிமை பறிக்கப்பட்டுள்ளது.கடும் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற வெளி நாட்டினருக்கு பிரான் ஸில் இடம் இல்லை என்ற அதிபரது நிலைப்பாட்டின் படி நாங்கள் இவற்றைப் பரிசீலித்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.-இவ்வாறு உள்துறை அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# சீன விண்கலத்தின் விலகிய பாகம் மாலைதீவு அருகே கடலில் வீழ்ந்தது

பீஜிங், மே 10

விண்வெளியில் கட்டுப்பாட்டை இழந்த சீனாவின் விண்கலத்தின் பெரும் பாகம் இந்து சமுத்திரத்தில் மாலைதீவுகள் அருகே கடலில் வீழ்ந்ததது என்று அறிவிக் கப்படுகிறது.

பீஜிங் நேரப்படி ஞாயிறு காலை 10.15 மணியளவில் விண்கலத்தின் எரிந்த பாகங்கள் கடலில் வீழ்ந்தன என்பதை சீன அதிகாரிகள் உறுதிப் படுத்தி உள்ள னர்.கடலில் ஏதேனும் சேதங்கள் ஏற்பட் டனவா என்பது உடனடியாகத் தெரிய வரவில்லை.

பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த விண்கலத்தின் பாரிய அந் தப் பாகம் ஒன்று நியூசிலாந்து, இந் தோனேசியா, அல்லது மேற்கு ஐரோப்பா போன்ற ஏதேனும் ஒரு பகுதியில் விழலாம் என்று கடந்த சில தினங்களாக எதிர்பார்க் கப் பட்டது.

விண்கலப் பாகம் பூமியில் வீழ் வதற்கு முன்னரே அதனை சுட்டு வீழ்த்துவது உட்பட பல வழி முறைகள் கைவசம் உள்ள போதிலும் அவ்வாறு செய்யத் தீர்மானிக் கப்படவில்லை என்று அமெரிக் காவின் பென்ரகன் அதிகாரிஒருவர் தெரிவித்திருந்தார்.



பூமியில் சுமார் 70 வீதம் கடற் பகுதி என்ப தால் அது பெரும் பாலும் கடலில் வீழ்வதற்கே வாய்ப் புகள் அதிகம் என்று விண்வெளி அறிவியலாளர்கள் கூறிய ருந்தனர். ஆயினும் வாழ்விடங்களில் வீழ்ந்து விடக்கூடும் என்ற அச்சம் உலக மக்கள் மத்தியில் காணப்பட்டது.

'Long March 5B rocket' என்ற பெயர் கொண்ட சீனாவின் விண்கலம் கடந்த மாதம் விண்வெளிக்கு செலுத்தப்பட்டது.

சீனா புதிதாக அமைத்துவரு கின்ற விண்வெளி நிலையத்துக்கான ஒரு முக்கியபாகத்தை எடுத்துச் சென்ற அந்த விண்கலம் கட்டுப் பாட்டை இழந்தது. சுமார் 18 தொன் எடை கொண்ட அதன் பெரும் பாகம் ஒன்று விலகி பூமியை நோக்கி வரத் தொடங் கியது. ஆனால் பூமியின்வளிமண் டலத்தில் பிரவேசிக் கும் போதே அது வெப்பத்தில் எரிந்து பலதுகள் களாகப் பிரிந்து போகும் வாய்ப்புக் காணப்பட்டது.

விண்கலங்கள் பூமியில் வீழ் கின்ற இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. ஓராண் டுக்கு முன்பு சீனா வின் மற்றொரு விண்கலப் பாகம் ஆபிரிக்காவில் ஐவரி கோஸ்ட்(Ivory Coast) நாட்டின் கிராமம் ஒன்றில் வீழ்ந்து சேதங் களை ஏற்படுத்தி இருந்தது. சீனா தனது விண்கலங்கள் குறித்துப் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டிவருகிறது.

நாடுகள் ஏட்டிக்குப் போட்டி யாக விண் வெளிக்குக் கலங்க ளையும் ரொக்கெட் டுகளையும் அனுப்பி வருவதால் அண்டவெளி ஆபத்தான பகுதியாக மாறி வருகிறது. பழுதடைந்த, அல்லது விபத்துக்குள்ளான கலங்களின் சிதைவுகள் சுற்றுப் பாதையில் கைவிடப் படுவதால் அங்கு அவை பெரும் கழிவுகளாகச் சேர்ந்து வருகின்றன. அவற்றில் சில பூமியில் வீழும் ஆபத்தும் ஏற்படுகின்றது.

# சிரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தீ!

டமஸ்கஸ், மே. 10

சிரியாவின் ஹோம்ஸ் நகரில் அமைந்துள்ள பிரதான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பாரிய தீ விபத்தொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்டது.

தீயை அணைக்கும் பணியில் படையினர் மும்முரமாக ஈடுபட்டனர்.

அனர்த்தம் காரணமாக உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்றும், தீயை அணைக்க தீயணைப்பு குழுக்கள் விரைந்து செயற்பட்டு வருவதாகவும் ஹோம்ஸ் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிப்பாளர் சுலைமான் மொஹமட் ஹால் உறுதிபடுத்தினார்.

ஹோம்ஸ் சுத்திகரிப்பு நிலையம் சிரியாவில் உள்ள இரண்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் ஒன்றாகும்.





# காபூல் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்கள் 58 பேர்!

காபூல், மே. 10

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் மேற்குப் பகுதியான ஷியா மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை பாடசாலை ஒன்றின் அருகே இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது.

இந்த மோசமான தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதால், அவர்களுக்கான சிகிச்சையை அளிப்பதில் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காய மடைந்தவர்களில் அனேகமானோர் இள வயது பெண்கள் எனக்கூறப்படுகிறது. நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற இந்த தாக்குதல், ஆப்கானிஸ் தானின் சிறுபான்மை சமூகம் ஒன்றை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு தீவிரவாத அமைப்பும் இதுவரை உரிமைகோராத போதும், தலிபான் அமைப்பினர் நாடளாவிய தாக்குதல் களை தீவிரப்படுத்தியுள்ளதாக ஆப்கான் அர சாங்கம் குறிப்பிட்டுள்ளது.

# அரேபிய கடலில் கப்பலை மடக்கிய அமெ. கடற்படை

நியூயோர்க், மே 10

அரேபிய கடலில் ஒரு கப்பலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதக் கப்பலை கைப்பற்றியதாக அமெரிக்க கடற்படை நேற்று அறிவித்தது.

இது ஏமனில் நீண்டகாலமாக நடைபெற்று வரும் போரில் போராளிக் குழுக்களுக்காக கொண்டு செல்லப்பட்டது எனக் கூறப்படுகிறது.

அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான ஏவுகணை எதிர்ப்பு கப்பல் யுஎஸ்எஸ் மான்டேரி, அரேபிய கடலின் வடக்கு எல்லைகளில் கடந்த வியாழக்கிழமை தொடங்கிய ஒரு நடவடிக்கையில், சந்தேகத்திற்குரிய கப்பல் ஒன்றைக் கைப்பற்றி சோதனை செய்ததில் இந்த ஆயுதக் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் சீன தயாரிப்புகள், கலாஷ்னிகோவ் பாணியிலான தாக்குதல் துப்பாக்கிகள், கனரக இயந்திர துப்பாக்கிகள் மற்றும் ராக்கெட் மூலம் இயக்கப்படும் கையெறி ஏவுகணைகள் ஆகியவை அடங்கும்.

கப்பல் எங்கிருந்து செல்கிறது என்று கடற்படை இன்னும் அடையாளம் காணவில்லை. இந்த கப்பலில் எந்த நாட்டு கொடியும் காணப்படவில்லை. மேலும் இது பாரம்பரிய அரேபிய பாணியில் கட்டப்பட்ட கப்பலாகும்.

பின்னர் விசாரணையில் இவை ஏமனுக்குச் செல்வதாக விவரிக்கப்பட்டது, அங்கு ஈரானிய ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சவூதி தலைமையிலான இராணுவக் கூட்டணியைக் கட்டுப்படுத்துவதற்காக 2015 முதல் போராடி வருகின்றனர்.

பல ஆண்டுகளாக மோதல்களால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஏமன் துறைமுகங்களில் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாத காரணத்தால் போராளிகளுக்கான ஆயுதங்கள் துறைமுகங்கள் மூலம் கடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



# மோடி அரசு மீது குற்றச்சாட்டு

புதுடில்லி, மே. 10

இந்தியாவின் தற்போதைய நிலைக்கு நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கமே பொறுப் புக்கூற வேண்டும் என பிரித்தானியா வின் லென்செட் மருத்துவ இதழில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொவிட்-19 பரவலின் முதலாம் அலையை கட்டுப்படுத்த இந்தியா சிறப்பாக செயற்பட்ட போதும், நரேந்திர மோடியின் அரசாங்கத் தின் நடவடிக்கையால் தற்போது அந்த நிலைமை சீர்குலைந்துள்ள தாக அந்த இதழின் புதிய கட்டுரை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவில் கொவிட்-19 பரவல் தொடர்பில் அந்நாட்டு பிரதமர் நரேந்திர மோடி யின் செயல்பாடுகளை மன்னிக்க முடியாது.

அதேநேரம் இந்தியாவில் கடந்த 24 மணித்தியாலங்களில் 409,300 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

அந்த காலப்பகுதியில் 4, 133 மரணங்களும் பதிவாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இதன்படி இந்தியாவில் கொவிட்-19 தொற்று உறுதியான வர்களின் எண்ணிக்கை 22,295,000 ஐ கடந்துள்ளது.

பதிவாகியுள்ள கொவிட்-19 மரணங்களின் எண்ணிக்கையும் 242,398 ஆக அதிகரித்துள்ளது.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்காமல் இருக்க இந்திய அர சாங்கம் விசேட நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரோக்கியோ ஒலிம்பிக் திட்டமிட்டபடி முன்னேறும்

ரோக்கியோ ஒலிம்பிக் முன்னோக்கிச் செல்வதைத் தடுக்க முடியாது என்று சர்வதேச ஒலிம்பிக் குழுவின் துணைத் தலைவர் ஜோன் கோட்ஸ் உறுதியாக கூறினார்.

ஜூலை மாதத்தில் தொடங்கவிருக்கும் விளையாட்டுக்கள் இந்த இக்கட்டான நிலையில் இரத்து செய்யப்படுமா அல்லது மீண்டும் ஒத்திவைக்கப்படுமா என்று ஏ.எப்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

டோக்கியோ ஒலிம்பிக்கை திட்டமிட்டபடி நடத்துவதற்கு தேவையான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொள்ள நாங்கள் ஜப்பான் பிரதமர் யோஷிஹைட் சுகாவுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம் என்றும் ஜோன் கோட்ஸ் கூறினார்.

ரோக்கியோ மற்றும் ஜப்பானின் பிற பகுதிகளில் வெள்ளிக்கிழமை நடைபெற்று வரும் தொற்றுநோய் மற்றும் அவசரகால வைரஸ் நிலை காரணமாக, விளையாட்டுகளின் நம்பகத்தன்மை குறித்து




கேள்விகள் தொடர்ந்து எழுப்பப்படுகின்றன.

டோக்கியோ விளையாட்டுக்கான சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் ஒருங்கிணைப்பு ஆணையத்தின் தலைவரான கோட்ஸ், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஜப்பானிய பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒரு பெரிய அளவிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கூறினார்.



# டோனியின் 'கறுப்புக்குதிரை'

டோனி புதியதாக 'பிளக் ஸ்டாலியன்' என்ற கறுப்புக்குதிரை வாங்கியுள்ளார்.

அண்மையில் 14ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடர் கொரோனா காரணமாக ஒத்திவைக்கப்பட, டோனி சொந்த ஊரான ராஞ்சியில் உள்ள பண்ணை வீட்டுக்கு சென்றார். 'பைக்', கார் பிரியர். விலங்குகள் மீதும் பாசம் கொண்டவர்.

இவர் தற்போது 'பிளக் ஸ்டாலியன்' என்ற கறுப்புக்குதிரை வாங்கியுள்ளார். இதையடுத்து ஜடேஜாவுக்குப் பின் குதிரை வைத்துள்ள இரண்டாவது இந்திய கிரிக்கெட் வீரர் ஆனார் டோனி.

இது குறித்து டோனி மனைவி சாக் சி, தனது 'இன்ஸ்டாகிராம்' சமூகவலைதளத்தில் கறுப்புக்குதிரையுடன் நாய் இருக்கும் வீடியோவை வெளியிட்டார். அதில்,'எங்கள் வீட்டுக்கு 'பிளக் ஸ்டாலியன்' வந்துள்ளது. உண்மையான 'ஜென்டில்மேன்', லில்லியை (நாய்) சந்தித்த போது மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டது,' என தெரிவித்துள்ளார்.

# எடையை குறைக்க வேண்டும்



உலக டெஸ்ட் பைனலுக்கான அணியில் பிரித்வி ஷா தேர்வு செய்யப்படாதமைக்கு அதிகமான எடை தான் காரணம் என கூறப்படுகிறது.

இங்கிலாந்து செல்லும் இந்திய அணி, உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பைனலில் (ஜூன் 18-22, சவுத்தாம்ப்டன்) நியூசிலாந்து அணியை சந்திக்கிறது. அடுத்து ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியுடன் விளையாடுகிறது. இதற்கான இந்திய அணியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட துவக்க வீரர் பிரித்வி ஷா சேர்க்கப்படவில்லை.

சமீபத்திய விஜய் ஹசாரே தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் இடம் பெற்றார். ஐ.பி.எல்., தொடரில் சிறப்பாக விளையாடினார். இருப்பினும் இந்திய அணியில் சேர்க்கப்படாததற்கு, இவரது அதிகமான உடல் எடை தான் காரணம் என கூறப்படுகிறது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை தரப்பில் வெளியான செய்தியில்-

பிரித்விக்கு 21 வயது தான் ஆகிறது. இருப்பினும் ரன்கள் எடுக்கும் ஓடும் போது மந்தமாக செயல்படுகிறார். தனது உடல் எடையை நன்றாக குறைக்க வேண்டும். ஆஸ்திரேலிய தொடரின் போது களத்தடுப்பிலும் சரியாக கவனம் செலுத்தவில்லை. இத்தொடருக்குப் பின் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். ரிஷாப் பந்தை பார்த்து இவர் கற்றுக் கொள்ள வேண்டும். அவரைப் போல பிரித்வியும் மீண்டு வரலாம்.

தவிர ஒரு தொடரில் மட்டுமல்லாமல், அடுத்தடுத்த தொடர்களில் சிறப்பாக விளையாட வேண்டும். ஏதாவது ஒரு உள்ளூர் தொடரில் நன்றாக விளையாடுகிறார் என தேர்வு செய்தால், சர்வதேச அளவில் சொதப்புகிறார்-என்று கூறப்பட்டுள்ளது.



# சிற்றியை வீழ்த்திய செல்சி

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 2-1 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது.

செல்சி சார்பாக, ஹகிம் ஸியெச், மார்கோஸ் அலோன்ஸோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ரஹீம் ஸ்டேர்லிங் பெற்றிருந்தார்.

இதேவேளை, லீட்ஸ் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது. டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை சண் ஹெயுங்-மின் பெற்றார். லீட்ஸ் சார்பாக, ஸ்டுவர்ட் டலாஸ், பற்றிக் பம்போர்ட், றொட்றிக்கோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# புதிய சாதனை படைத்த திவங்க

ஐக்கிய அமெரிக்காவின் டெக்ஸாஸில் இடம்பெற்ற 2021 லோன் ஸ்டார் மாநாடு தட மற்றும் கள சம்பியன்ஷிப்பில், ஐக்கிய அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட இலங்கை தடகளவீரரான உஷான் திவங்க பெரேரா, உயரம் பாய்தலில் புதிய தெற்காசிய, இலங்கைச் சாதனையைப் படைத்துள்ளார்.

டெக்ஸாஸ் ஏ அன்ட் எம் பல்கலைக்கழகம்-வியாபாரத்தை பிரதிநிதித்துவப்படுத்திய 23 வயதான திவங்க, 2.30 மீற்றர் உயரத்தை பாய்ந்து, ஆண்களுக்கான உயரம் பாய்தலில் முதலிடம் பெற்றுள்ளார்.

மேரி ஸ்டெலா கல்லூரியின் முன்னாள் மாணவனான திவங்க, புலமைப்பரிசிலில் இலங்கையிலிருந்து குறித்த பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருந்தார்.



# இரு மொழிக் கொள்கையை குறைந்த பட்சம் பாராளுமன்றத்திலேனும் அமுல்படுத்துங்கள்

## சுமந்திரன் வேண்டுகோள் தமிழ் எம்.பிக்களுக்கு சிங்களத்தில் கடிதம் வழங்கப்படுவதற்கு எதிர்ப்பு



கொழும்பு, மே10

**நாடாளுமன்றத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் சிங்கள மொழியில் வழங்கப் படுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் விசனம் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற அதிகாரிகள் மொழிக் கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்துவதில் குறைவான அணுகுமுறையைக் கையாள்கின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அவசர நிலைமையைப் பிரகடனப்படுத்தக் கோரி, சுமந்திரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார்.

இந்நிலையில், அவரது பிரேரணை சுகாதார அமைச்சுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் கடிதம் அவருக்கு சிங்கள மொழியில் வழங்கப்பட்டுள்ளது.

"தமிழ் உறுப்பினர்களுக்கு சிங்கள மொழியில் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. நாம் இந்தப் பிரச்சினையை எத்தனை தடவைகள் முன்வைத்துள்ளோம்?

நாடாளுமன்ற ஊழியர்களுக்கான சுற்றறிக்கைகளும் சிங்களத்தில் மட்டுமே வழங்கப்படுகின்றன.

அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இரு மொழிக் கொள்கையை, குறைந்த பட்சம் நாடாளுமன்றத்திலேனும் அமுல் படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான உரிமை மீறல்கள் தொடர்வது ஏன் கவனிக்கப்படுவதில்லை?" என்று சுமந்திரன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். (இ)

---

## கொக்கேயின் போதைப்பொருளுடன் தென்னாபிரிக்கப் பிரஜை சிக்கினார்

கொழும்பு, மே 10

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த தென்னாபிரிக்கப் பிரஜை ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 60 மில்லியன் ரூபா பெறுமதியான 2.29 கிலோ கிராம் கொக்கேயின் போதைப் பொருள்சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (இ)

---



## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பதில் தலைவராக சஹீட் நியமனம்

கொழும்பு, மே 10

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பதில் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், கட்சியின் அரசியல் குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

கட்சியின் தலைவரின் அதிகாரங்களும் பதில் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது எனக் கட்சியின் அரசியல் குழு தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க பதில் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் கட்சியின் அரசியல் குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

---

### 101 பேருக்குக் கொரோனா:

## இழுத்து மூடப்பட்டது பிலியந்தலை சந்தை

கொழும்பு, மே 10

பிலியந்தலை வர்த்தக கட்டடத் தொகுதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

எழுமாற்று பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 101 பேர் அடையாளம் காணப்பட்டமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (இ)

---

## தபால் திணைக்கள வாகனம் மூலம் கடிதங்கள், பொதிகள் விநியோகம்

கொழும்பு, மே 10

தபால் ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ள போதிலும், திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்கள் ஊடாக கடிதங்கள் மற்றும் பொதிகள் விநியோகிக்கப்படும் என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. தாமதமின்றி கடிதங்களை விநியோகிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று பிரதி தபால்மா அதிபர் ராஜித்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நிலவும் கொரோனாத் தொற்று நிலைமையால் தபால் அலுவலகங்களின் சேவைக்காலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உப தபால் அலுவலகங்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை திறக்கப்பட்டிருக்கும் அதேநேரம், உப தபால் அலுவலகங்கள் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மாத்திரமே திறக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ)

---

# மேலும் 21 கிராம சேவகர் பிரிவுகள் கொரோனாத் தொற்றால் முடக்கம்!

## - இராணுவத் தளபதி அறிவிப்பு



கொழும்பு, மே 10

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் மேலும் 21 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய, இரத்தினபுரி மாவட்டத்தின் ரக்வான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொலோ கந்த, ரம்புக, கத்லான, தனபெல, இம்புக் கந்த மற்றும் பொத்துபிட்டிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன்இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனாகொல, குபுக்மிட்டிய, குடாவ, தெல்கொட கிழக்கு, தெல்கொட மேற்கு, தேவாலகம, கலஹாகம, கொஸ்வத்த, கபஸ்ஸர கந்த, வதுராவ, வெம்பிட்டியகொட, வெத்தாகல கிழக்கு, வெத்தாகல மேற்கு மற் றும் தவுலகலகம கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

மேலும், நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்கூம்ஸ் தோட்ட கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்தின் பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாரம்பிட்டிய கிராம சேவகர் பிரிவுக்கு விதிக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் நேற்றுக் காலை முதல் நீக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (இ)

---

# பிரதமரின் இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டது எதற்காக?

## - முஷாரப் எம்.பி. விளக்கம்



கொழும்பு, மே 10.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அண்மையில் அலரி மாளிகையில் இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டமை தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் முதுநபீன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பிரத்தியேகமாக கலந்துரையாடுவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் 7 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தர்ப்பம் கோரியிருந்தனர் எனவும், அதற்கு குறித்த நாளில் மாலை 5.30 மணிக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதாகப் பிரதமர் கூறியிருந்தார் எனவும் முஷாரப் முதுநபீன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது:-

"மாலை 5.30 மணிக்குச் சந்திப்பை நிகழ்த்துவதாக இருந்தால், இப்தார் நேரம் என எம்மால் எடுத்துக்கூறப்பட்டதையடுத்து தான் இப்தாருக்கான ஏற்பாட்டைச் செய்வதாக பிரதமர் அழைப்பு விடுத்திருந்தார்.

எனவே, பிரதமரின் அழைப்பின் நிமிர்த்தம் அங்கு சென்ற நாம் இப்தார் நிகழ்விலும் கலந்துகொண்டு பிரதமருடன் நீண்ட நேரம் கலந்துரையாடினோம்.

முஸ்லிம் மக்கள் எதிர்கொள்கின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். அவற்றின் பலவற்றைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு வழிவகைகள் செய்வதாக பிரதமர் உறுதியளித்தார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமரை மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பது சாதாரண விடயம்.

இந்தச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து ஒரு சிலர் அரசியல் செய்கின்றமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்" - என்றுள்ளது.

இதேவேளை, இஸ்லாமிய தலைவர்கள் மற்றும் மக்களின் பங்களிப்புடன் மிக பிரமாண்டமாக நடைபெறும் இப்தார் நிகழ்வு கொரோனாத் தொற்று காரணமாக ஒரு சிலரின் பங்களிப்புடன் நடைபெற்றது எனப் பிரதமர் அலுவலகம் கடந்த வியாழக்கிழமை அறிக்கை மூலம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## யாழ். மாவட்ட...

றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 486 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 பேரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தலா 2 பேரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 2 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 4 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் மூவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தலா ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள நோதேர்ன் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற இருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்குச் சிகிச்சைக்குச் சென்ற இருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா நோயாளியாக அடையாளம் காணப்பட்ட யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் கிளிநொச்சி கிருஷ்ணபுரம் சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ)

## அரசியல்...

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக கடந்த வாரம் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் ஒன்றிணைந்து அமைச்சர் சமல் ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியுள்ளனர். இந்நிலையில் 'அது ஒரு ஆரோக்கியமான அவசியமான ஒருங்கிணைந்த முன்னெடுப்பாகும். இதேபோன்று தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கைதிகளின் உறவினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

"கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் 40 பேரும், அனுராதபுரம் சிறைச்சாலையில் 27 பேரும், நாட்டில் உள்ள மேலும் பல்வேறு சிறைகளில் 12 பேரும் என மொத்தமாக 79 தமிழ் அரசியல் கைதிகள் சிறைத்தடுப்பில் உள்ளார்கள்.

அவர்கள் 25 முதற்கொண்டு 10 வருடகாலமாகத் தொடர் சிறையில் உள்ளார்கள். அவர்களுடன் இருந்த பல அரசியல் கைதிகள் சிறைக்குள்ளேயே இறக்கின்றனர்.

நெடுங்காலமாக குடும்ப உறவுகளிடம் இருந்து பிரித்து வைக்கப்பட்டுள்ளதால் உடல், உள ரீதியில் பாதிக்கப்பட்டு 90 வீதமானவர்கள் மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளார்கள்.

அத்தோடு சிறைகளில் ஏற்பட்ட இட நெருக்கடியை குறைக்கும் முகமாக அரசால் இரு வேறு தடவைகளில் ஆயிரக்கணக்கான கைதிகள் விசேட ஏற்பாடுகளின் ஊடாக விடுவிக்கப்பட்டனர்.

எனினும், தமிழ் அரசியல் கைதிகள் எவருக்கும் அதில் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. எனவே, இந்தத் தருணத்திலாவது ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி எதிர் அணிகளாக இருந்தாலும் சரி கட்சி, கொள்கை வேறுபாடுகளைக் கடந்து அரசியல் கைதிகள் தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அனைத்து தமிழ்க் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளும் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் ஒரு பொதுப் பொறிமுறையை முன்வைத்து மனிதாபிமான அடிப்படையில் பேச்சில் ஈடுபட வேண்டும்" - என்றனர். (இ)

## வரலாற்றுச்...

நோக்குடன் யாழ்ப்பாணம் மரவுரிமை மையம் என்னும் அமைப்பு நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மரவுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு ஒரு அமைப்பை நிறுவுவதற்கு யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் மேற்கொண்ட முயற்சியால் 11 நபர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட குறித்த அமைப்பு நேற்று நிறுவப்பட்டுள்ளது.

மாநகர மேயரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மரவுரிமை மையத்தின் தலைவராக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவர்களாக வைத்திய கலாநிதி பேராசிரியார் ரவிராஜ் மற்றும் நடராஜா சுகிர்தராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளராக மருத்துவபீட பதிவாளர் ராஜேந்திரம் ரமேஸ், துணைச் செயலாளராகப் பாசுப்பிரமணியம் கபிலன், பொருளாளராக பேராசிரியர் செல்வரட்ணம் சந்திரசேகரம், இணைப்பாளராக சிவகாந்தன் தனுஜன், பதிப்பசிரியராக வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மையத்தின் உறுப்பினர்களாக விஸ்வலிங்கம் மணிவண்ணன், விஸ்வபாலசிங்கம் மணிமாறன், பூவானசுந்தரம் ஆரூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பொதுமக்களின் பங்களிப்புடன் இந்த அமைப்பு வரலாற்று சின்னங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அனைத்திலும் உள்ள வரலாற்றுச் சின்னங்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பாடசாலையை...

உள்ளிட்ட தரப்பினர் பங்கேற்பார்கள் எனவும் கல்வி அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் தொற்று அதிகரிப்புடன் பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவை எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்த ஆலோசனைகளையும் மேற்படி கலந்துரையாடலில் பகிர்ந்துகொள்ளவுள்ளோம்.

நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமை வாராந்தம் மதிப்பிடப்பட்டு வருகின்றது. கல்விசார் நிறுவனங்களை மீண்டும் திறப்பது குறித்து ஒரு திட்டவட்டமான திகதியை அறிவிக்க முடியாதுள்ளது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் அரசு முழு முயற்சியுடன் செயற்பட்டு வருகின்றது.

இதனிடையே நாட்டு மக்களின் வருமானம், வாழ்வாதாரங்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட பிற அம்சங்களையும் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது" - என்றார். (இ)

# மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களுடன் பணிபுரிய நிறுவனங்களுக்கு உத்தரவு

கொழும்பு, மே 10

மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களுடன் பணியாற்றுமாறு அரசதுறை நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படவுள்ளன. இது குறித்த சுற்றுநிருபமொன்று இன்று வெளியாகவுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் இதனை தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். கர்ப்பிணிகளாக உள்ள ஊழியர்களை வேலைக்கு அழைப்பதை தவிர்க்குமாறும் புதிய சுற்றுநிருபம் கேட்டுக்கொள்ளவுள்ளது.

# வவுனியாவில் மேலும் 4 பேருக்கு கொரோனா

வவுனியா, மே 10

வவுனியாவில் மேலும் 4 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில், பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், நெடுங்கேணியில் உள்ள இராணுவத்தினர் இருவருக்கும், வீதி திருத்தப் பணியில் ஈடுபடும் மாமடுவைச் சேர்ந்த ஒருவருக்கும் என 4 பேர் மேலும் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

## இலங்கையை...

இதையடுத்து நாட்டில் இதுவரையில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 906 ஆக உயர்வடைந்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் முதல் தடவையாக 20 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. இதன்படி 20 ஆயிரத்து 657 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 1,365 பேர் பூரணமாகக் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 463 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## குடாநாட்டில்...

வடைகின்றது.

இந்தநிலையில், யாழ்.மாவட்ட செயலகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நாவற்குழி அரச களஞ்சியத்தில் 300 நோயாளர் படுக்கைகள் கொண்ட சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் வசாவிளான் கட்டடத்தில் இடவசதிக்கு அமைவாக நோயாளர் படுக்கைகளை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், யாழ். மாவட்ட அரச களஞ்சியம் மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் என்பவற்றில் மலசலகூடங்கள் உள்ளிட்டவற்றை அமைக்கும் பணிகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (இ)

## யாழில்...

பிட்டியைச் சேர்ந்த 88 வயதுடைய வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வயோதிபர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று பிற்பகல் 3 மணிக்கு அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புக்குக் கொரோனா நோய்த் தொற்று பாதிப்பும் காரணம் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

வயோதிபரின் சடலம் யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானத்தில் இன்று மின் தகனம் செய்யப்படவுள்ளது. (இ)

## மேலுமொரு...

துள்ளார்.

இவருடன் சேர்த்து இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை இரண்டு கர்ப்பிணிப் பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, நாட்டில் புதிய கொரோனா கொத்தணியில் 130 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## மேலும் 15 பேர்...

களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டாரகம, அம்பிட்டிய, கணேமுல்ல, ராகம, குளியாப்பிட்டி, பிபிலை, கல்கிரியாகம, பசறை, வஸ்கடுவ, நேபொட, போம்புவல, நாவுன்துடுவ, கொழும்பு 07 மற்றும் மடுல்கலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 801 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மின ஆபத்தான...

கியத்துவம் குறித்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெளிவுபடுத்தியுள்ளோம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதி வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் தரம் வாய்ந்த கொரோனாத் தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ள நிலையில், நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் தடுப்பூசி போடும் பணியை முடிந்தவரை விஸ்தரிக்க வேண்டும்.

தற்போது இலங்கையில் பரவி வரும் வைரஸ் முன்னைய வைரஸை விடவும் மிகவும் தீவிரமானது. இந்த வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு 4 முதல் 5 நாட்களுக்குள் அறிகுறிகள் வெளியாகின்றன. எனவே, அனைவரும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட கொரோனா சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

புதிய வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் நுரையீரலைக் கடுமையாக பாதிப்பதுடன், தீவிரமான நிமோனியாவை ஏற்படுத்துகின்றது. அதனால் குருதி உறைவு ஏற்படும் வாய்ப்பும் அதிகம் உள்ளது.

இந்தக் கட்டத்தில் நோயாளிக்கு சிகிச்சையளிப்பது மிகவும் கடினம். அத்தோடு ஒட்சிசன் மற்றும் தீவிர சிகிச்சையும் நோயாளிக்கு அவசியமாகின்றது.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் எமது நாட்டில் உள்ள சுகாதார வளங்களைக் கொண்டு அதிகமானவர்களுக்கு சிகிச்சை வழங்குவது மிகவும் கடினமானது.

எனவே, இதனை இலகுவாக எடுத்துக்கொள்ளாமல் ஒவ்வொருவரும் இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்" - என்றார். (இ)

ஈழநாடு
Eelanadu

# உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் மூலமாகவே பிரிட்டன் வைரஸ் நாட்டிற்குள் நுழைந்தது

## தொழில் நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர்

**கொழும்பு, மே10**

**இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட உக்ரைன் மற்றும் ஏனைய நாடுகளை சேர்ந்த சுற்றுலாப்பயணிகள் மூலமே நாட்டிற்குள் பிரிட்டனில் காணப்படும் வைரஸ் நுழைந்தது என அரச மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ரவிகுமுதேஸ் தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் இலங்கைக்குள் நுழையும்போது அது எங்கிருந்து வந்தது என்பதை கண்டுபிடிப்பதற்கான தொழில்நுட்பம் ஆய்வுகூட வசதிகள் அறிவு போன்றவை இலங்கையில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த உண்மை மீண்டும் எங்களிற்கு நினைவூட்டப்பட்டுள்ளது, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைகழகம் இந்திய கொரோனா இலங்கைக்குள் வந்துள்ளது என தெரிவித்துள்ளது. இந்தியாவில் காணப்படும் கொரோனா வைரஸ் இலங்கைக்குள் நுழைந்துள்ளமை குறித்து நேற்று முன்தினம் அறிவிப்பு வெளியாகியுள்ள போதிலும் அது எப்போது இலங்கைக்குள் வந்தது என்பதை தெரிவிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியர்களை இலங்கைக்குள் அழைத்துவந்தவேளை கவனம் செலுத்துங்கள் இது குறித்து பொறிமுறை குறித்து ஆராயுங்கள் என நாங்கள் தெரிவித்திருந்தோம் என ரவிகுமுதேஸ் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் இந்தியா மிகவும் ஆபத்தான நாடாக மாறியவேளை இந்தியர்களை இலங்கைக்கு அழைத்து வரவேண்டாம் என தெரிவித்திருந்தோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவை எவற்றையும் அரசாங்கம் கருத்திலெடுக்கவில்லை ஒரு கட்டத்தில் 'எயர் பபிள்' மூலம் உக்ரைன் மற்றும் வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் அழைத்து வரப்பட்டனர். இது இரகசியமாக முன்னெடுக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ள ரவிகுமுதேஸ் இதன் காரணமாகவே பிரிட்டனில் காணப்படும் வைரஸ் இலங்கைக்குள் நுழைந்தது என எங்களால் தெரிவிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இரண்டாவதாக அவர்கள் விளம்பரம் செய்து இந்தியர்களை இங்கு தனிமைப்படுத்தலிற்காக அழைத்துவந்தனர். நாங்கள் எவ்வளவு சொன்னாலும் அவர்கள் அதனை செவிமடுக்கவில்லை என ரவிகுமுதேஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக இந்திய வைரஸ் இங்கு நுழைந்துள்ளது சர்வதேச அளவில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நான்கு வைரஸ்களில் மூன்று வைரஸ்கள் இலங்கையில் காணப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ள ரவிகுமுதேஸ் பிரேசில் வைரஸ் மாத்திரமே இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# பண்டாரவளை நகர சந்தை மறு அறிவித்தல் வரை பூட்டு




பண்டாரவளை, மே 10

பண்டாரவளை நகர பொதுச்சந்தை நேற்று முதல் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் சுகாதார அதிகாரிகளும், பொலிஸாரும் தொடர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறு சந்தை மூடப்பட்டிருந்தாலும் நேற்றுக் காலை சில வியாபாரிகள், அத்துமீறி விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து பண்டாரவளை மாநகர சபை, பிரதேச செயலக சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பண்டாரவளை பொலிஸார் இணைந்து அவர்களைத் திரும்பியனுப்பினர்.

வெல்லவாய, ஹப்புத்தளை பகுதிகளைச் சேர்ந்த சில்லறை வியாபாரிகளே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டனர். (இ)

# மட்டக்களப்பில் காணாமல்போன நபர் 12 நாட்களின் பின்னர் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, மே 10

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் 12 நாட்களுக்குப் பின்னர் வாழைச்சேனை பிரதேச காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடியைச் சேர்ந்த 58 வயதுடைய வோலாட்சி சாமித்தம்பி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் வெளியேறினார் எனவும், ஆனால் வீடு திரும்பாத நிலையில் அவர் காணாமல்போயுள்ளார் எனவும் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று வாழைச்சேனை முறுத்தானை வயலை அண்டிய காட்டுப் பகுதியில், சடலம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் காணப்படுகின்றன என்று அந்தப் பகுதியில் விவசாயம் மேற்கொள்வதற்காகச் சென்றவர்கள் சிலர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், கடந்த 27ஆம் திகதி காணாமல் போன செங்கலடியைச் சேர்ந்த நபர் என அடையாளம் கண்டதைத் தொடர்ந்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை மற்றும் ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)



# பதவியைப் பொறுப்பேற்றார் உலக உணவுத் திட்ட பணிப்பாளர்

கொழும்பு, மே 10

இலங்கைக்கான புதிதாக நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் வதிவிடப் பணிப்பாளரும், பிரதிநிதியுமான அப்துர் ரஹீம் சித்திக்கி உத்தியோகப்பூர்வமாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் தமது சான்றுப்பத்திரத்தை கையளித்தார்.

இந்த சந்திப்பின் போது, உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தல், ஊட்டச்சத்து மேம்பாடு, மற்றும் நிலைபேறான விவசாயத்தின் ஊடாக சிறியளவிலான விவசாயிகளின் நெகிழ்வுத்திறனை வலுப்படுத்தலில் அரசாங்கத்திற்கான ஆதரவின் உலக உணவுத் திட்டம் இலங்கையின் உறுதிப்பாட்டினை சித்திக்கி மீள்வலியுறுத்தினார்.

“தசாப்தங்கள் நீடித்த சிவில் யுத்தத்தின் முடிவு முதல் இலங்கை எட்டியுள்ள சமூகப் பொருளாதார தேர்ச்சி எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது” என சித்திக்கி குறிப்பிட்டார்.

“ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பு சார்ந்த தற்போதைய சவால்களை அடையாளப்படுத்துவதற்கும், எதிர்கொள்வதற்கும் அரசாங்கம் மற்றும் ஏனைய பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு என்னுடைய சக ஊழியர்களும், நானும் அர்ப்பணிப்புடன் உள்ளோம். நிலைபேறான தீர்வுகளின் ஊடாக இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய சமுதாயங்களின் வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்” என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 2: பட்டினியின்மை என்பதற்கு அமைவாக 2022ல் எட்டப்பட வேண்டிய குறிக்கோள்களின் தொகுப்பை உள்ளடக்கிய றுதீன் நாட்டின் மூலோபாயத் திட்டம் குறித்து திரு. சித்திக்கி மற்றும் கௌரவ குணவர்தன ஆகியோர் கலந்துரையாடினர். அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் 1968இல் உலக உணவுத் திட்டம் நாட்டில் செயற்பாடுகளை ஆரம்பித்தது முதல், இலங்கை எட்டியுள்ள தேர்ச்சியையும் சித்திக் கலந்துரையாடினார்.

# கொரோனா வைரஸ் தடுப்பூசியை செலுத்திக்கொண்டார் ஹரீன்

## 10 லட்சம் பேர் போட்டதால் தானும் போட்டதாக தகவல்



கொழும்பு, மே 10

சுமார் ஒரு மில்லியன் மக்கள் கொரோனா தடுப்பூசியை பயன்படுத்தியுள்ளதை தொடர்ந்து தான் நேற்று கொரோனா தடுப்பூசியை செலுத்திக்கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

தனது உடல்நிலையை கருத்தில்கொண்டு மருத்துவர்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒருமில்லியன் மக்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசியை செலுத்திக்கொண்ட பின்னர் இன்று நான் தடுப்பூசியை செலுத்திக்கொண்டேன் என குறிப்பிட்டுள்ள அவர் எனது உடல்நிலையும் கூடிய விரைவில் நான் தடுப்பூசியை கூடிய விரைவில் எடுக்கவேண்டிய நிலையை ஏற்படுத்தியது மருத்துவர்கள் ஆலோசனை வழங்கினார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒருமில்லியன் மக்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளும் வரை தான் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளப் போவதில்லை என பெப்ரவரி மாதம் ஹரீன்பெர்ணான்டோ தெரிவித்திருந்தார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அசுரன் ,விஸ்வாசம் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயில் ரைம்
06.30 மணி : நலந்தானா-கண்,காது, பல் வைத்திய நிபுணர்-பா.திருமாறன்



7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு